தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை.

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2 நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. முதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ 5. ஆருட ப்ரிசீனகளுக்கு ரூ 1 மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார் "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

தொண்டை, சுவாசப்பையை பாதுகாருங்கள்

இருமல், ஜலதோஷம், குளிர், தொண்டை உபத்திரவம் முதலியவற்றால் அவதிப்பட்டால், பெப்ஸ் சுவாச மாத்திரைகள் நிச்சயம் குணமளிக்கும்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. தொத்துக் கிருமிகளை பெப்ஸ் ஒழித்துவிடுகின்றன. நாசி அடைப்பைப் போக்கி, ஜளிப்பை வெளிப்படுத்தி விடும். எக்காலத்தும் மார்பு, சுவாசப்பைக்கு பாதுகாப்பளிக்கும். எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாசக சுவாச மாத்திரைகள்.



"எப்பொழுதும் உபயோகியுங்கள்"

வாசு சங்கு மார்க் பட்டணம்பொடி

உலகமெங்கும் புகழ்பெற்றது

வாசு பூபேந்தரநாத் & கோ.

மதிராஸ் பெஜவாடா.

நான் காப்பாற்ற பட்டதினால், என் தாயாருக்கு மிகுந்த சந்தோஷம்.

ஜம்மியின் லிவர்க்யூர்

ஜம்மியின் லிவர்க்யூர் சென்ற 36 வருடங்களாக இவனைப்போல் ஆயிரக்கணக்கான குழந்தைகளை இவ்வ பாயகரமான ஈரல் குலைக்கட்டி வியாதிகளினின்றும் காப்பாற்றியிருக்கிறது

எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன.

ஜம்மி வெங்கிடரமணய்யா அண்டு சன்ஸ்—மைலாபூர், மதராஸ்.

சப் ஆபீஸ்:—கும்பகோணம், (S.I.R.)

கிளைகள்:—பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சினாப்பள்ளி, பெங்களூர், விஜயநகரம்.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

மலச்சிக்கலோ அல்லது பித்தக்கொதிப்போ அல்லது மண்டை கனமோ அல்லது தலைவலியோ அல்லது மயக்கமோ அல்லது வாய்துர்நாற்றமோ அல்லது சருமப்படுவனோ இருந்தாலும்

உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாக்கெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள்:—

மெஸர்ஸ்:

சிவராம் & ஸ்வாமி லிமிடேட்.

154, தைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

மதனமஞ்சரி

மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,

184, சைனைபஜார் ரோடு, மதராஸ்.

கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 27?, சுக்ரவார் பேட்டை

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி

வைத்தியசாலை,

பழனி. S. I.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். பாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras, *Editor*, C. R. Srinivasan B.A.

சுதேசமித்திரன்

Vol. 14 No 3 21-2-43 வாரப்பதிப்பு Price 2 Annas

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEK

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு 21 - 2 - '43

மகாத்மாவின் உபவாஸம்

★

மகாத்மா உபவாஸம் தொடங்கி ஒருவாரத்துக்கு மேலாகி விட்டது. நாட்டினர் நாட்டமெல்லாம் ஆகாகான் அரண்மனையிலுள்ள காந்திஜியிடம் திரும்பி நிற்கிறது. ஒவ்வொரு நாளும் என்ன செய்தி வருமோ என்று ஏங்கி நிற்கின்றனர் மக்கள். இச் சோதனையிலிருந்து மகாத்மா மீட்சி பெற வேண்டுமேயென்று அனைவரும் அல்லும் பகலும் ஆண்டவனைத் துதித்து வருகின்றனர்.

மகாத்மாவுக்கும் வைஸ்ராய்க்குமிடையே நடந்த கடிதப் போக்குவரத்து சென்ற வாரம் வெளியாகியிருக்கிறது. உபவாசகாலத்தில் காந்திஜியை விடுதலை செய்வதாகச் சர்க்கார் சொன்னார்கள். தன்னுடைய விடுதலையை முன்னிட்டு மகாத்மா இந்த உபவாசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டிலுள்ள நிலைமையை ஆராய்ந்து நிலைமையை இப்படியே விட்டு வைக்காமல் ஓர் நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்பதே காந்திஜி கருத்து. யுத்த காரணங்களை முன்னிட்டும், விலைவாசிகள் உயர்ந்து வருவதை உத்தேசித்தும் ஜனங்கள் மனத்தில் கலக்கமும், கவலையும் குடிகொண்டிருக்கின்றன. இதை வளர விடுவது தற்போதுள்ள நிலைமைக்கு உகந்ததல்லவென்று எண்ணினார் மகாத்மா. இவ்வெண்ணமே சிறையிலிருந்து வைஸ்ராய்க்குக் கடிதமெழுத அவரைத் தூண்டியது. நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென்றும் வைஸ்ராயை அவர் கேட்டுக்கொண்டார். மகாத்மாவை இக்கொடுஞ் சோதனையிலிருந்து மீட்க வைஸ்ராய்க்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிட்டியது. அதை அவர் நழுவ விட்டுவிட்டது துரதிருஷ்ட வசமாகும். அங்ஙனம் செய்தது ராஜதந்திர முறையுமாகாது. எனவே, மகாத்மா தமது ஆத்ம பலத்தை நம்பி, ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு ஆரம்பித்துவிட்டார் உண்ணாவிரதம். உபவாசம் காந்திஜிக்குப் புதிதல்ல. அதன் சக்தியை நன்கறிந்தவர். ஆனால் இப்போதைய உபவாசத்துக்கும் முந்திய உபவாசங்களுக்கும் வித்தியாசமுண்டு. மகாத்மாவுக்கு வயது 74; வேகமும், வீச்சும் இருக்கக்கூடிய வயதில்லை. கவலையால் காயம் தளர்ந்துவிட்டது. கவலை கரைய வேண்டுமாயின் காரியம் கைகூட வேண்டும். அந்த லட்சியத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தார். வழி பிறக்கவில்லை.

இன்றைய நிலைமையில் சமரஸத்துக்குச் சற்றும் இடங்கொடாமல் பிரச்னையைத் தட்டிக் கழிப்பதே சர்க்காரின் கொள்கையென்று தோன்றுகிறது. இதனால் நஷ்டம் சர்க்காருக்குத்தான். இந்தியா சட்ட சபையில் உள்நாட்டு மெம்பர் ஸர் ரெஜினால்ட் மாக்ஸ்வெல் செய்த பிரசங்கம் பரிகாரத்துக்கு இடம் கொடுப்பதாயில்லை. காந்திஜி மீதும் காங்கிரஸ் மீதும் பழி சுமத்தியிருக்கிறார். விடுதலை பெற வேண்டுமென்ற விருப்பத்தால் தான் மகாத்மா இம்மாதிரி உபவாச மேற்கொண்டதாகச் சொன்னார். ஆனால், காந்திஜியின் உண்மை நோக்கம் என்னவென்பதை அவர் அறிவாரா? அறிவதற்கு நியாயமில்லை. கனம் ஊஸ்மான், ஸர் ஏ. பி. பாத்ரோ, ஸர் ராமுண்ணி மேனன் முதலியவர்கள் நம் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களும் உண்மை நிலையை உணராமல் ஸர் மாக்ஸ்வெல் பல்லவிக்கு அனுபல்லவி பாடுவதுதான் விந்தை. இன்றைய நிலை சீர்பட ஒரே மார்க்கந்தான் உண்டு. மகாத்மாவின் உபவாசத்தை நிறுத்த உடனே வழி காண வேண்டும். நாட்டிலுள்ள சர்வகட்சியினரும் இதே கோரிக்கையைத் தெரிவிக்கின்றனர். இதைச் சர்க்கார் புறக்கணித்துத் தங்கள் போக்கையே கைக்கொண்டால் அது எதிர்கால இந்திய-பிரிட்டிஷ் உறவுக்குப் பெருங் கேட்டை விளைவித்ததாகும். சர்க்கார் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து உடனே மகாத்மாவையும், காங்கிரஸ் தலைவர்களையும் விடுவித்து சமரஸத்துக்கு அடிகோல வேண்டும்.

சென்ற வார நிகழ்ச்சிகள்

★

இந்திய ரயில்வே வரவு செலவுத் திட்டம்

சென்ற 15-ந் தேதி இந்தியா சட்டசபையில் ரயில்வே வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. போக்குவரத்து மெம்பர் கனம் ஸர் பெந்தால் அதைச் சபையில் சமர்ப்பித்துப் பிரசங்கம்செய்தார். "ரயில்வே செல்வ நிலைமை திருப்திகரமாயிருக்கிறது. ஆனால் இந்த சுபிக்ஷம் முற்றிலும் உண்மையான தோற்றமல்ல. குறை கூறும் எண்ணமுடையவர்கள் இந்த சுபிக்ஷ நிலைக்கு ரயில்வே இலாகா காரணம் என்பதை அதிகமாக ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மற்ற தொழில்களைப் போலவன்றி இந்தத் தொழிலில் கிடைத்ததைக்கொண்டு பூரணமாக முயன்றே இவ்வித நிலைமை ஏற்பட வழிகண்டோம் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

இத்திட்டப்படி 1943-44-ம் வருஷத்தில் ரயில்வேக்கு ரூ. 36·04 கோடி உபரி கிடைத்திருக்கிறது. நடைமுதல் வருஷத்தில் கிடைக்கும் உபரித் தொகை ரூ. 36·28 கோடியாகும். எஞ்சிய தொகையை விநியோகம் செய்வதுபற்றி சர்க்கார் புதிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். பிரயாணிகள் போக்குவரத்துக் கட்டணங்களிலும் சாமான்களை அனுப்புவதற்காக விதிக்கப்படும் கட்டணங்களிலும் எவ்வித மாறுதலும் கிடையாது. ராணுவத்துக்காக ஒவ்வொரு மாதமும் 400 ஸ்பெஷல்கள் விடப்படுவதாகவும் இந்த வருஷத்தில் 1½ கோடி டன் எடையுள்ள யுத்த தளவாடங்களை ரயில்வேக்கள் ஏற்றிச் சென்றிருக்கின்றனவென்றும் ஸர்பெந்தால் தெரிவித்தார். பிரஸ்தாப வருஷத்தில் பிரயாணிகளின் வண்டிகள் 37% வீதம் குறைவுபட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

* * * *

ஜோஸ்யர் கைதி

குலாம் ஹுஸேன் என்ற ஜோஸ்யர் கராச்சியில் பாதுகாப்புச் சட்டப் பிரகாரம் கைது செய்யப்பட்டிருக்கிறார். வெளி நாடுகளுக்குச் சென்றால் கெடுதல் நேரிடுமென்று அவர் ஒரு சிப்பாய்க்கு ஜோஸ்யம் கூறியதாகவும், அதன் பேரில் சிப்பாய் தன் மனதை மாற்றிக் கொண்டு, ராணுவ ஸேவையை விட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

* * * *

வங்காளத்தில் குண்டு வீச்சு

இந்தியா சட்ட சபையின் 12-ந் தேதி கூட்டத்தில் ஸ்ரீ சடோபாத்யாயர் கேட்ட ஒரு கேள்விக்கு ஸிவில் பாதுகாப்புக் காரியதரிசி பதிலளிக்கையில் கல்கத்தா, சிட்டகாங், பெனி ஆகிய விடங்களில் செப்டம்பர் 16-ந் தேதி முதல் பிப்ரவரி 10-ந் தேதிவரை விரோதி விமானங்கள் வெடி குண்டு வீசியதன் பயனாக மொத்தம் 348 பேர் கொல்லப்பட்டதாகவும் 459 பேர் காயமடைந்ததாகவும் கூறினார்.

* * * *

உணவுப்பொருள் நெருக்கடி

இந்தியாக் கவர்ன்மெண்டு வியாபார இலாகா மெம்பர் கனம் சர்க்கார் உணவுப் பொருள் மத்ய ஆலோசனை சபைக் கூட்டத்தில் பேசுகையில், இந்தத் தடவை மாசூல் முற்றிலும் திருப்திகரமாகவில்லாவிட்டாலும் அதிகமாகப் பீதி அடையும்படி நிலைமை கேவலமாகவில்லையென்று கூறினார். உணவுப்பொருள் சப்ளை சம்பந்தமாக சர்க்கார் போட்டுள்ள திட்டத்தின் விவரமாவது:—

உபரியாகவுள்ள மாகாணங்களிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவிக்கவும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கவும் அவற்றைப் போதுமான உணவுப்பொருளில்லாத மாகாணங்களுக்கும் ராணுவத்துக்கும் சப்ளை செய்யவும் சர்க்கார் ஏற்பாடு செய்வார்கள். அகில இந்திய முறையில் கட்டுப்பாடாக இக்காரியம் நடக்கும். போதிய உணவுப்பொருள் கிடைக்காத மாகாணங்களில் மாகாண கவர்ன்மெண்டுகள்

(18-ம் பக்கம்)

இதழில் இருப்பவை

	பக்கம்
போர் போகும் போக்கு	4
குண்டலகேசி	5
நாடோடிப் பாட்டுக்கள்	7
திட்டமான வாழ்க்கை	9
பழைய இடத்திலேயே படுகுழி	11
பொய்யோ! மெய்யோ!!	1
பயங் கொள்ளி (சிறு கதை)	13
கலா மோஹினி	15
பறக்கும் குதிரை (சிறுவர் பகுதி)	17
கண்ணாடி (நவ நாகரிகம்)	18
படங்கள்	19

சோவியத் போர்முனை



ரஷ்யர் ராஸ்டாவைக் கைப்பற்றிவிட்டார்கள். சென்ற நவம்பர் மாதம் முதல் நடந்து வரும் சோவியத் எதிர் தாக்குதலில் இது அவர்களுக்கு மிகப் பெரிய வெற்றி. இதுவரை நான்கு முறை கைமாறியிருக்கிறது அந்நகரம். சென்ற வருஷம் ஜப்பானியர் அதை காகஸஸுக்குள் புகும் வழியாகக் கருதினர். இப்போது அது ரஷ்யர் உக்ரேனுக்குள் பிரவேசிப்பதற்கான மார்க்கமாகி விட்டது. காகஸஸிலுள்ள ஜெர்மன்படைகளுக்கெல்லாம் மூலதளமாக இருந்ததுஅதுதான். காகஸஸில் சிக்கிய எதிரிகள் அவ்வழியாகவே, தப்பியோட எண்ணியிருந்தார்கள். இப்போது அந்த வழி, அடைபட்டு விட்டது. இனி அவர்கள் கெர்ச் ஜலசந்தியைக் கடந்து உயிர்தப்ப முயற்சிசெய்யலாம். ஆனால் ரஷ்யர் அதற்கும் முட்டுக்கட்டை போட முன்னதாகவே நடவடிக்க எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கருங்கடல் துறைமுகமான நவரோஸிஸ்கை ஜெர்மனியர் காலி செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

ராஸ்டாவுக்கு வடக்கேயுள்ள வோரோஷிலவ்கிராட் என்ற முக்கிய நகரும் சோவியத் வசமாகிவிட்டது. ராஸ்டாவைக் கைப்பற்றியபின் ரஷ்யர் அதற்கு மேற்கேயுள்ள மற்றொரு முக்கிய ஜெர்மன் தளமான டகன்ராகை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்கள்.

தென் ரஷ்யாவில் ஹிட்லரின் பெரிய தளம் கார்காவ் தான். அதையும் ரஷ்யர் இப்போது கைப்பற்றிவிட்டார்கள். தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டு வருவதைக் கண்டு ஹிட்லர் மனமுடைந்திருக்கக் கூடும். தலைமை சேனாதிபதி என்ற முறையில் தமக்குள்ள பொறுப்பை அவர் வேறு ஜெர்மன் தளபதிகளின் தலைக்கு மற்ற ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.



ஆப்பிரிக்க அரங்கம்

டியூனிஸியா போர்முனையில் தென் பகுதியில் அச்சுப்படைகள் தீவிரமாகத் தாக்கி வருகின்றன. இதில் ரோமலின் படை முக்கியப் பங்கெடுத்துக் கொண்டு வருகிறது. எதிரிகள் பெய்ட் கணவாயிலிருந்து மேற்கே முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். அப்பகுதியிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் பின்வாங்குவதாகவும் அவை மீது ஜெர்மன் பருந்துப்பாய்ச்சல் விமானங்களின் குண்டு வீச்சு மிகக் கடுமையென்றும் தெரிகிறது. ஜெர்மனியர் அதற்குள் கப்ஸா என்ற முக்கிய ஸ்தலத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். அந்நகர் ஸ்பாக்ஸ் துறைமுகத்திலிருந்து செல்லும் ரயில் பாதையில் 110 மைல் தூரத்தில் இருக்கிறது. எகிப்திலிருந்து ரோமலின் படையைத் துரத்திக்கொண்டு வந்த மாண்ட்கோமரியின் படை டியுனிஸியா—டிரிபோலிடானியா எல்லைப்பகுதியில் கடற்கரையோரமாக மேற்கு நோக்கி முன்னேறிக்கொண்டிருப்பதாக நேச அதிகாரிகள் அறிவிக்கின்றனர். அந்த பிரிட்டிஷ் படை ஏற்கனவே டியுனிஸியாவில் உள்ள தங்கள் சகாக்களுடன் சேர வொட்டாமல் செய்வதே தற்போது எதிரிகள் துவக்கியிருக்கும் பெரிய தாக்குதலின் நோக்கமாயிருக்கலாம்.

* * * *

538 முறை துப்பாக்கிப் பிரயோகம்

சென்ற வருஷப் பிற்பகுதியில் நடந்த கலவரத்தின் காரணமாக 60,229 பேர் கைது செய்யப்பட்டதாயும், சென்ற டிசம்பர் மாத முதலில் இன்னும் 39,498 பேர் காவலில் இருந்ததாயும் இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி காமன்ஸ் சபையில் தெரிவித்தார்.

போலீஸார் 470 முறையும் ராணுவம் 68 தடவையும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாயும் அவர் சொன்னர்.

* * * *

ரூஸ்வெல்ட் பேச்சு

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ரேடியோமூலம் பேசுகையில், டூனிஸியாவில் நடக்கவிருக்கும் மஹத்தான யுத்தம் முடிந்ததும் ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்த நேச தேசங்கள் திட்டமிட்டிருப்பதாகத் தெளிவுபடுத்தினர்.

ஜனாதிபதி ஜப்பானும் கடுமையாகத் தாக்கப்படும் எனத் தெரிவித்தார். நேச தேசங்கள் ஒவ்வொரு தீவாகப் பிடித்துக் கொண்டு போகப்போவதில்லை என்றும், சீனாவிலிருந்து கொண்டு ஜப்பானைத் தாக்கப் போகின்றன என்றும் அவர் கூறினர்.

* * * *

அமெரிக்கர் பொறுப்பு பற்றி கர்னல் நாக்ஸ்

"ராஜிய, பொருளாதார, ராணுவ விஷயங்களில் அமெரிக்கர் இனி தனித்திருக்க முடியாது. அவர்களது க்ஷேமம் இதர ஜனங்களது க்ஷேமத்தையே பொறுத்திருக்கிறது" என லிங்கன் பிறந்த தின விழாவில் அமெரிக்க கடற்படை மந்திரி கர்னல் நாக்ஸ் சொன்னர்.

பணத்தை வைத்துக்கொண்டிருப்பதால் மட்டுமே பலன் இல்லை என்பதையும், இனி பலத்த ராணுவம் அவசியம் என்பதையும் அமெரிக்கர் உணர வேண்டும் என்றும் பொருளாதாரக் கூட்டுறவே பிரதானம் என்றும், பிற நாடுகளுக்கும் உதவ அது வழி தேட வேண்டும் என்றும் அவர் கூறினர்.

* * * *

ஜப்பானியரை எளிதில் விரட்ட முடியாது

இந்து மகா சமுத்திரத்தில் இருக்கும் டச்சு கடற்படையின் தலைவரான அட்மிரல் ஹெல்ட்ரிக், இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிவு பெருது எனத் தெரிவித்ததாக, ஆஸ்திரேலியாவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

அட்மிரல் ஹெல்ட்ரிக் மேலும் கூறியதாவது:—தங்கள் வசம் வந்த பிரதேசங்களை ஜப்பானியர் சீக்கிரத்தில் விட்டுவிட மாட்டார்கள். கூடியவரை போராடிப் பார்ப்பார்கள். அவர்களை ஒவ்வொரு தீவிலிருந்தும் துரத்த வேண்டும்.

யுத்தத்திற்கு முன்புபோல் இப்போது எதிரியின் பலத்தைக் குறைத்துக் கூறுபவர் இல்லை. இந்த யுத்தம் நான் நிச்சயமாக நம்புகிறபடி நீடித்து நடந்தாலும் எவரும் நிதான புத்தியை இழக்கக்கூடாது.

* * * *

"இங்கிலீஷ் காந்தி"

ஸர் ஸ்டோபோர்ட் க்ரிப்ஸின் பார்லிமெண்டரி காரியதரிசியான மிஸ்டர் ஜார்ஜ் ஸ்ட்ராஸ் என்பவரின் மனைவி மிஸஸ் பாட்ரீஷியா ஸ்ட்ராஸ் எழுதியிருக்கும் "கிரிப்ஸ், அட்வகேட் அண்ட் ரெபல்" என்ற புத்தகத்தின் விமர்சனம் டெயிலி மெயில் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது. மதிப்புரை எழுதிய மிஸ்டர் எம்ரி ஜோன்ஸ், "பார்லிமெண்ட் மெம்பர்கள் க்ரிப்ஸை 'இங்கிலீஷ் காந்தி' என்று அழைப்பது எனக்குத் தெரியும். பொது மக்கள் எண்ணுவது போன்ற நிலைமையில் அவர் இல்லை. முன்பு நியாயவாதியாக ஏராளமாகச் சம்பாதித்த அவர், இப்போது செல்வந்தராக இல்லை என்றே கூற வேண்டும். இது மிஸஸ் ஸ்ட்ராஸின் கருத்து" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த விமர்சகர் மேலும் எழுதுவதாவது:—

வெளிநாட்டு விவகாரங்களை ஆராய க்ரிப்ஸ் முடிவு செய்தார். இந்தியாவுக்குப் போய் அங்குஅமைதியைஉண்டுபண்ணவும் அவர் விரும்பினர். ஸர்க்கார்அவரது பிரயாணச் செலவை மேற்கொள்ளவில்லை. பிரயாணசமயத்தில் போதிய பணம் இல்லாமல் அவர் கஷ்டப்பட்டது உண்மை. நியாயவாதத் தொழிலை விட்ட பின்பு பார்லிமெண்ட் மெம்பர் என்ற ஹோதாவில் அவருக்குப் பிரதி வருஷமும் 600 பவுன்கள் கிடைத்து வருவதைத் தவிர வேறு வருமானம் கிடையாது என்று மிஸஸ் பாட்ரீஷியா ஸ்ட்ராஸ் எடுத்துக் காட்டுகிறார்.

* * * *

பல்கேரியாவில் ஜெர்மன் அரண் அமைப்பு

பல்கேரியாவிலிருந்து துருக்கிக்கு வரும் பிரயாணிகள் கூறுவதாவது:—பல்கேரியாக் கரையில் ரஷ்யர் படை இறக்குவரென்று ஜெர்மனியர் அஞ்சுகின்றனர். அவர்கள் கடலோரமாக அதிலும் முக்கியமாக பர்காஸிலும், வார்ணுவிலும் அரண்களைக் கட்டி வருகிறார்கள்.

4

தலை தப்பியது

★

வ. வேணுகோபாலன்

சூரியோதயம் ஆயிற்று. எங்கும் மெல்லிய சிவந்த கிரணங்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள மாளிகைகளில் சிலர் அழைத்தும் அழையாமலும் உள்ளே புகுந்தனர். கணிகையர் வீதியில் உள்ள மாளிகைகளில் அழையாமலே நுழைவது இயல்பு. சூரிய கிரணங்கள், சாளரங்கள் வழியாக உள்ளே புகுந்து தம் மேனிகளில் தவழ்ந்த பின்பே கணிகை மகளிர் எழுந்திருப்பர். அன்றைய தினம், அதற்கு மாருக, அவ்வீதியில் உள்ள உன்னத மாளிகை ஒன்றின் மேல் மாடத்தில் சாளரக் கதவுகள் சூரியோதயத்திலேயே திறக்கப் பெற்றிருந்தன. விசாலமான அந்த மாளிகையில் சாளரங்கள் மிகுதியாக இருந்தன. மேல் மாடத்தின் நடுவில் விளங்கிய இரண்டு பெரிய சாளரக் கதவுகளும் நன்ருகத் திறந்திருந்தன. அதற்கு நேராக மாடத்தின் நடுவில் சித்திரப் பூங்கட்டிலில் இருவர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கட்டிலின் ஒரு பக்கத்தில் இளைய ஆண் சிங்கம் போன்ற ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அருகில் அழகே வடிவெடுத்து வந்தாற் போன்ற ஓர் இளமங்கை அமர்ந்திருந்தாள். அரையில் கட்டியவரிளில் ஒரு கையையும், இள மங்கையின் வலது கையில் ஒரு கையையும் வைத்து உட்கார்ந்திருந்தான். புன்னகை பொலியத் தலை நிமிர்ந்து பேசினுன் அவன். குனிந்த தலையுடன் பேசினுள் அவள். வெண்கலத்தால் செய்த மணியின் ஒலி போல் கலகல வென்றிருந்தன அவன் வார்த்தைகள். ஒரு கிளியின் மழலைச் சின் மொழியாக இருந்தது அவள் பேச்சு. இடையிடையே ஒருவருக் கொருவர் நகைத்துக் கொண்டது கிண்கிணியும் சிலம்பும் ஒலிப்பன போன்று இருந்தன. சிறிது நேரம் இருவரும் பேச்சற்று மௌனமாக இருந்தனர். பேச்சின் தொடக்கத்திலேயே இளமங்கை ஒரு கேள்வி கேட்டாள். எவ்வாறு அதற்கு மறுமொழி கூறுவது என்று ஆலோசித்தான் இளைஞன். அறிவு என்னும் அமைச்சன் அவன் முன் தோன்றி ஒன்றைக் குறிப்பித்தான். உடனே இளைஞன்,

கேள்வி பதில்

"வேறு, காரணம் இல்லை." என்றுன் புன்னகையுடன்.

"இன்றைய தினமும் காரியம் இருக்கிறதோ?"

"ஆம், இன்னும் சில நாட்கள் அவர்களுடன் அலைய வேண்டியிருக்கிறது. ஆனாலும் உன்னைப் பார்க்காமல் என்னல் இருக்க முடியுமா?......"

"அவர்கள் யார் என்று யான் அறியலாமோ?"

"துருக்க வணிகர்கள் தாம், நமது மரக்கலங்கள் ஐந்தும் பண்டங்களை ஏற்றிக் கொண்டு அயல்நாடு செல்ல வேண்டும். நம் ஆட்களுடன், அவர்களையும் அனுப்ப வேண்டும். எனக்கு மிகவும் அவர்கள் வேண்டியவர்கள்......அதனலென்ன? எந்தக் காரியம் இருந்தாலும் இரவில் இங்கு வந்து விடுவேன். நீ கவலைப்படாதே."

"தாங்கள் சொன்ன பின், மறுமொழி நான் என்ன, சொல்லுவேன். என்னுடைய மன இயல்பைத் தாங்கள் அறியீர்களா? இந்திர விழா, தொடங்கிய சில நாட்களிலிருந்து தாங்கள் சோர்வடைந்திருக்கிறீர்கள். அதனல் என் மனம் மிகவும் வருந்துகிறது, அதனல் கேட்டேன்,"

"வேறு, காரணம் இல்லை என்றேனே! உன் மனம் வருந்தினல் என் மனம் வருந்தாதா? வருத்தத்தை அகற்றிவிடு. நான் உன்னை அறியேனு? என்னை நீ அறியாயா? மனம் கலங்குவது எதற்காக? இன்பம் துன்பம் இரண்டையும் சமமாக எண்ணும் எனக்கு மனச் சோர்வு கிடையாது.

எத்தனையோ பல துன்பங்கள் அடைந்திருக்கிறேன். நீயும் அடைந்திருக்கிருய். அந்தக் காலங்களிலெல்லாம் நாம் இன்பம் பெறவில்லையா? நம் இன்பத்திற்கு இடையூறு எக்காலும் உண்டாகாது. 'நீ, மாசற்றதும், மணம் மிக்கதும், வாடாததுமாகிய பாரிசாத மலர். ஆடவராகிய பிற வண்டுகள் உன் மீது மொய்யா. எனக்கே உரியவள் நீ,' என்று யான் அந்நாள் கூறியது இன்றும் என் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்நிகழ்ச்சியையெல்லாம் நீ மறந்தாயா?"

உயிரும் உடலும் உங்களுடையது

"யான், மறக்கவில்லை. பெரும் மழையால் தளிர்த்த மரம்போல்



"சயந்தி! யாரோ ஒருவர் வந்திருக்கிறார். சேனைத் தலைவர் என்று சொல்லுகிறார்" என்றுள் சயந்தியின் சேடியான நாகவல்லி.

தங்கள் வார்த்தைகளால் என் உள்ளமும் உயிரும் தளிப்புறுகிறது. அவ்வார்த்தைகள் எனக்கு இன்ப ஊற்ருக இருக்கின்றன. 'என் உயிர் உடல் இரண்டையும் புத்ததேவன் அறிய, தங்களுக்கே உரிமையாக்கி விட்டேன்.' என்று அன்று, யான் கூறியதையும் தாங்கள் உணர்வீர்கள். பழைய நிகழ்ச்சிகளை நினைக்க நினைக்க என் உள்ளம் குளிர்கின்றது. மாலைக்காலத்தில், இம்மாடத்திலிருந்து புத்ததேவரது லீலைகளையும், அவர் அருளிய பொன் மொழிகளையும் தாங்கள் கூறி வந்தது எனக்குப் பேரின்பமாக இருந்தது. சில நாட்களாக அவ்வாறு கேட்கும் பாக்கியம் எனக்கு இல்லையே என்று வருந்துகிறேன்."

"ஆம், எனக்கும் அப்படித்தான். போதிநாதன் (புத்தன்) அருளால் நமக்குச் சிறிதும் குறைவு உண்டாகாது" என்ருன். அப்போது அவன் முகத்தில் ஒருவிதச் சோர்வு இருப்பது நன்ருகப் புலப்பட்டது. அவள், அதை நன்ருக உணர்ந்துகொண்டாள்.

"தாங்கள் ஏதோ மனக்கவலை அடைந்திருக்கிறீர்கள். அதை அடியாளுக்கு வெளியிடக்கூடாது என்று மறைக்கிறீர்கள்"

"ஒன்றும் இல்லை. அப்படி இருப்பதாக நீ அறிந்துகொண்டது எவ்வாறு?"

"தங்கள் முகமே அறிவிக்கின்றது. அது மட்டுமல்ல. நேற்றிரவு, தாங்கள் தூங்குகையில் ஏதோ பிதற்றினீர்கள்..."

"நானு? என்ன பிதற்றினேன்?"

"அது விளங்கவில்லை. அதனுல்தான் கேட்கிறேன்."

"பிதற்றியிருப்பேன். அதற்குக்காரணம் அங்கும் இங்கும் அலைவதுதான்"

"அலைந்தால்?"

"உடலுக்கு அலைச்சல் ஏற்பட்டால் மனச்சோர்வு உண்டாகிறது. அதனுல் ஏதாவது பிதற்றியிருப்பேன். வேறென்றும் இல்லை."

"அவ்விதமானுல், நான் கேட்கவில்லை. சிறிது இப்பழங்களை சாப்பிடுங்கள்."

"ஆனுல், இன்று பகலிலும் இங்கு தங்கவேண்டும் என்கிருயா?" என்று கூறிக்கொண்டே, சில பழங்களை சாப்பிட்டான்.

"ஆம், இன்று மாலையில், காவிரி சங்கமத்திற்குப் போகலாம் என்றுதான்."

"நான் வேறு காரியமாகச் செல்லவேண்டுமே"

"இந்திரவிழா முடிவதற்குச் சில தினங்களே இருக்கின்றன. தாங்கள் இல்லாமல் தனியே போகப்போவதில்லை"

"இல்லை, அதற்குள் ஒரு நாள் போய் வருவோம்."

"தங்கள் விருப்பம்போல் செய்யுங்கள்."

"இன்று மாலை வரையில் இங்கு இருந்து விட்டுப்போகிறேன். நிச்சயமாக ஒரு நாள் அழைத்துப் போகிறேன்" என்று கூறினுன்.

சயந்தியின் நாட்டியத்திறமை

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தனர். இளமங்கையின் பெயர், சயந்தி. அவளுடன் பேசிக்கொண்டிருந்த இளைஞன் ஸத்துகன் தான். நாடகக் கணிகையர் குலத்தில் உதித்தவள் சயந்தி. அவளுக்கு இருபது வயது இருக்கும். கணிகையர் வீதியில் உள்ள மகளிரில், அழகுக்குப் பேர் பெற்றவள் சயந்தி. நாட்டியம் ஆடுதலில் வல்லமை உடையவள். பதினுரும் வயதில் அரங்கிலேறி நாட்டியம் ஆடினுள். அன்று அவள் நாட்டியத்தைக் கண்ட யாவரும் வியந்து அவளைப் புகழ்ந்தனர். அன்று அவள் நாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்தவர்களில் ஸத்துகனும் ஒருவன். அன்று அவனைக் கண்டு காதல் கொண்டாள் சயந்தி. ஸத்துகனும் அவளைக் காதலித்தான். அது முதல் ஸத்துகனும் சயந்தியும் இணை பிரியாக் காதலராயினர். ஸத்துக்கனைக் காதல் நாயகனுக்க் கொண்டபின், பொது இடங்களில் நாட்டியம் ஆடுவதை நிறுத்திவிட்டாள் அவள். அவளுடைய இளமைச் செவ்வியின் இன்பத்தில் மயங்கி இருந்தான் ஸத்துகன். இரவும் பகலும் அவளைப் பிரியாமல், உடனிருந்து வந்தான். அவளுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து வந்தான். ஸத்துகனும், சயந்தியும் காதலர் என்பதைப் பலரும் அறிவர். ஸத்துகன் இல்லாமல் தனியே எங்கும் அவள் செல்வதில்லை. அதனுல் பிறர் அவளைக் காண்பதே அரிது. கணிகையர் குலத்தில் பிறந்தவளெனினும் சேற்றில் மலர்ந்த தாமரைபோல் பரிசுத்தமானவள். இணையற்ற அழகுடையவள். நற்குணம் உடையவள். பெண்களுக்குள் விளக்குப்போல் விளங்கினுள். புத்ததேவனிடம் அளவற்ற பக்தியுடையவள். ஸத்துகனிடம் அவளுக்குப் பிரேமை அதிகமாகிக்கொண்டே இருந்தது. அதற்குக் காரணம், புத்ததேவனைப்பற்றிய கதைகளையும், அவர் அருளிய பொன்மொழிகளையும் அவளுக்கு நாள்தோறும் கூறிவந்தான். அதைக் கேட்டு மனம் உருகுவாள் சயந்தி. ஸத்துகனுக்கு அவ்வாறு கூறுவதில் ஆவல் அதிகம்.

களங்கமற்ற காதல்

ஸத்துகனை அன்றி வேறொரு ஆண்மகனை நினையாள் அவள். தெய்வமாகவே அவனைக் கருதினுள். அவளைப்போல் அவனுக்கும் பிரேமை அதிகம். அக்நி பூர்வமாகக் கலியாணம் ஆகாததுதான் குறை. கணிகையர் கலியாணத்தை, யார் மதிப்பார்கள்? அது விதிக்கு விலக்கு என்றே கூறுவர். அதைக் குறையாக அவர்கள் கருதவில்லை. சயந்தி, விரும்பும் எந்தப் பொருள்களையும் உடனுக்குடன் வாங்கிக் கொடுத்தான். பலவகை ஆபரணங்களை அவளுக்கு அணிவித்தான். அவர்களின் காதலுக்குப் பல இடையூறுகள் நேர்ந்தன. சயந்தியை விரும்பிய ஆடவர்களில் பலர் ஸத்துகன் வாளுக்கு இரையாயினர். சயந்தி ஒரே நிலையில் இருந்தாள். அதனுல், பிறகணிகையர்களுக்குச் சயந்தியிடம் பொருமையும் வெறுப்பும் இருந்து வந்தது. ஸத்துகனிடத்துள்ள அச்சத்தால், கணிகையர் வெளிப்படையாகச் சயந்தியைப் பகைக்கவில்லை. தங்களுக்குள் மறைமுகமாகவே பேசிக்கொள்வர். சயந்தியும் அதை அறியாமலில்லை. கணிகையர் குலத்தையும், அவர்கள் செய்கையையும் வெளிப்படையாக வெறுத்தாள். ஸத்துகன் இருக்கையில் அவளுக்கு யாரிடம் பயம்? இவர்களுக்குக் காதல் முளைத்து மூன்று வருஷங்களுக்குமேல் ஆயின. அது வளர்ந்துகொண்டே இருந்தது. களங்கம் இல்லாத காதல்தான். இடையே அதற்கு பங்கம் வந்துவிட்டது. அதற்கு காரணம் யார்? ஸத்துகனு? சயந்தியா? ஸத்துகன்தான். கணிகையர் குலத்தில் பிறந்தவளாயினும் கற்புக்களஞ்சியமாக விளங்கினுள் சயந்தி.

ஸத்துகனிடம் மாறுதல்

சயந்தியின் உயிர்க் காதலனுகிய ஸத்துகன், அன்று, ஒரு நாள், வணிகர் வீதியில் பத்திரையைக் கண்டது முதல் அவள் மோக வலையில் வீழ்ந்தான். சயந்தியை மறக்கலானுன். ஆனுல், அது இயலவில்லை. உயிரோடு ஒன்றிய அந்தக் காதல் எளிதில் மறையுமா? ஸத்துகனின் வஞ்சனையைப் பேதை சயந்தி அறியாள். கள்ளம் கபடமற்ற அவள் ஒன்றும் அறியாள். பத்திரையின் அழகுக்கும் குணங்களுக்கும் எந்த விதத்திலும் சயந்தி குறைந்தவள் அல்லள். உயர் குலத்துப் பிறந்தவள் பத்திரை. கணிகையர் குலத்துப் பிறந்தவள் சயந்தி. இதுவே இருவருக்கும் வேற்றுமை. உயர் குலத்தில் பிறந்ததற்கேற்ப பத்திரையின் முகத்தில் ஒரு பொலிவு இருந்தது. கல்வியறிவுமிக்க பத்திரையின் வதனம் வசிகரம் வாய்ந்தது தான். எனினும் சயந்தியின் முகம் சிறிதும் கவர்ச்சிக்குறைவு உடையதல்ல. சயந்தியிடம் இல்லாத அழகும் இன்பமும் பத்திரையிடம் இருப்பதாக எண்ணி அவன் மயங்கினுன். பத்திரையிடம் இளமைச் செவ்வியின் புதுநலம் மாந்த பேரவாக் கொண்டான். ஸத்துகனின் மாயம் ஒன்றையும் அவள் அறியவில்லை. காதல் என்பது இன்னதன்மையது என்பதை அவன் உணர்ந்திருந்தால்அவ்வாறுசெய்திருப்பானு? ஸத்துகனுக்கும் பத்திரைக்கும் காதல் உண்டாயிருப்பதைச் சயந்தி உணர்ந்தால் அவள் உள்ளம் எவ்விதம் இருக்கும்? பத்திரையிடம் ஸத்துகன் காதல் கொண்டது முதல், கடந்த சில நாட்களாக சயந்தியின் மாளிகையில் முன்போல் தங்குவதில்லை. இரவில் மட்டும் வருவான். பகலில் சென்று விடுவான். முன்புபோல் சயந்தியுடன் இனிமையாகப் பேசுவதில்லை. முன்பிருந்த குதூகலமும், களிப்பும் இப்பொழுதில்லை. அவன் மனம் கலங்கியிருந்தது. தன்மீது சயந்தி ஐயங்கொள்ளாதவாறு, சிறிது மன உறுதியுடன் அவளோடு பேசிவந்தான். அவன் தன் மனதில் உள்ளதை மறைத்தபோதிலும் அவன் உள்ளக்கலக்கத்தை எளிதில் சயந்தி உணர்ந்து கொண்டாள். உணர்ந்தும் என்ன? அவன் மனத்தைப் புண்படுத்திப் பலவந்தமாக அவன் உள்ளக்கிடக்கையைக் கிளறிவிட விரும்பவில்லை அவள். தானுகவே உள்ளத்தில் உள்ளதைக் கூறுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் கூறவில்லை. ஓருயிரும் ஈருடலுமாய் இருந்து நேயமுடன் பழகும் தன்னிடம் சொல்லத்தகாத விஷயம் என்ன? என்று அவள் உள்ளம் ஏங்கியது. 'இந்திர விழாத் தொடங்கி இவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் சில நாட்கள் தாம் முடிவதற்கு இருக்கின்றன. மாலைக்காலத்தில் நகர்க்காட்சியைக் கண்டு மகிழ்வதற்கு விருப்பம் இல்லை. இவ்வளவு நாட்கள் மனமொன்றி இருந்து என் விருப்பத்தை இன்புடன் நிறைவேற்றி வரும் இவர் சில நாட்களாக மனம் கலங்கியிருப்பதற்குக் காரணம் என்ன; யான் ஏதாவது பிழை செய்திருப்பேனு? என்று வருந்தினுள். வருத்தத்தை வெளிக்காட்டாமல் எப்பொழுதும் போல் அன்று அலர்ந்த செந்தாமரை மலர் என முகமலர்ச்சியுடன் இருந்தாள்.

ஸத்துகன் தவிப்பு

தன்னுடைய நேர்மையற்ற செய்கையை எவ்வாறேனும் சயந்தி உணர்ந்தால் உயிர் துறப்பாளோ என்று எண்ணி இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவித்தான் ஸத்துகன். ஆனுல் சயந்தியின் மெல்லிய உள்ளம் வருந்தி பிளவுற்றபோதிலும் பத்திரையைப் பற்றிய சிந்தனையை அகற்ற அவன் துணியவில்லை. நேர்மைக்கும், மனத்தூய்மைக்கும் சான்ருக விளங்கிய சயந்தியைக் கண்டு பேசும்போதெல்லாம் அவனுக்கு ஒரு வித அச்சமும் இரக்கமும் உண்டாகும். எனினும் பத்திரையிடம் அவனுக்குத் தோன்றிய புதியமோகம், அவன் அறிவை விழுங்கி விட்டது.

மாலையில் நகர்காட்சி காண்பதற்குச் சயந்தியை அழைத்துப் போக அவன் விரும்பவில்லை. பத்திரையிடம் கொண்ட புதிய காதலும்அவளைக்காணவேண்டுமென்று மேன்மேல் எழுகின்ற ஆசையுமே அதற்குக் காரணம். ஆனுலும் சயந்தியின் விருப்பத்தை ஒருவாறு பூர்த்திசெய்ய எண்ணினுன். அன்றையதினம் மாலைக்காலம் வரையில் சயந்தியுடன் தங்கினுன். அங்கேயே நீராடி உணவு அருந்தினுன். அவளோடு இனிமையாகப் பேசிபொழுதுபோக்கினுன். சயந்தியின் மனம் அமைதி அடையும் பொருட்டு, புத்ததேவன் அருளிய பொன் மொழிகளைக் கூறினுன். புத்ததேவனிடம்

(16-ம் பக்கம்)

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

சாலு சாலு நீயுக்துலு நடவது
ஸார ஸாக்ஷ ஸ்ரீ க்ருஷ்ணு

அனு பல்லவி

சூல தராதுல கருதைன மமு கூடி
ஸுகமு லனுபவிம்பவே ஸ்ரீக்ருஷ்ணு

சரணம்

1. அதர ரதமுல கனி ஸொக்குசுமே
மாசிஞ்சி வச்சிதிமி
புதரக்ஷகசல்ய ஸாரத்ய மொன ரிஞ்சி
பொங்குலெறுக மைதிமி ஸ்ரீ க்ருஷ்ணு
2. கண்ட சக்கரவண்டி பலு குலு வினிமேமு
காமிஞ்சி வச்சிதிமி
உண்டி யுண்டி பாலுனிகில்லி மரிதொட்ல
னூச தெருகமைதிமி ஸ்ரீ க்ருஷ்ணு
3. த்யாகராஜ னுதுட னியதி ப்ரேமதோ
தருணுலு வச்சிதிமி
போகி சயனமாமாடலு மீ ரகு
புத்திசாலி வெளது ஸுமீ ஸ்ரீ க்ருஷ்ணு

II

ஸ்ாரஸாக்ஷ! ஸ்ரீ க்ருஷ்ண!—தாமரைக் கண்ணனுகிய
சாலு சாலு—போதும் போதும் [ஸ்ரீ கிருஷ்ணு!
நீ யுக்துலு நடவது—உன் தந்திரம் இங்கே பலிக்காது.
சூல தராதுலகு அருதைன—பரமசிவன் முதலானவர்களுக்கும்
மமுகூடி—எங்களை அடைந்து [கிடைத்தற்கரிதான
ஸுகுமுலு அனுபவிம்பவே—இன்பம் பெறுவாய்
ஸ்ரீ க்ருஷ்ணு—ஸ்ரீக்ருஷ்ணு
அதர—உன் சிவந்த உதடுகளையும்
ரதனமுல—உன் அழகான பற்களையும்
கனி—நாங்கள் கண்டு
ஸொக்குசு—மயங்கிப் போய்
மேமு ஆசிஞ்சி வச்சிதிமி—நாங்கள் ஆசைகொண்டு உன்னி
புதரக்ஷக—சாதுக்களை ரக்ஷிப்பவனே! [டம் வந்துசேர்ந்தோம்
சல்ய ஸாரத்திய மொனரிஞ்சி பொங்குலு—கர்ணனுக்கு சல்
யன் தேர்ப்பாகனுய் இருந்துசெய்த தீமைகளை இங்கும் செய்
யும் உன் பொய்யான வார்த்தைகளை
எறுக மைதிமி—அறியாமற் போய்விட்டோம்
ஸ்ரீ க்ருஷ்ணு!—ஸ்ரீ கிருஷ்ணு
கண்டசக்ரவண்டி—கற்கண்டு போன்ற இனிமையான
பலுகுலுவினி—உன் பேச்சைக் கேட்டு மயங்கி
மேமு காமிஞ்சி வச்சிதிமி—நாங்கள் உன்னை விரும்பி ஓடி வந்
வந்தோம்
உண்டியுண்டி—இருந்து இருந்து
பாலுனி கில்லி—குழந்தையையும் கிள்ளி விட்டு
மரி தொட்லன் ஊசதி—பிறகு தொட்டிலையும் ஆட்டிவிடும்
உன் குறும்புத் தனமான செய்கையை
எருகமைதிமி—நாங்கள் அறிந்து கொள்ளாமல் போய்விட்
டோம்
ஸ்ரீ க்ருஷ்ணு!—ஸ்ரீ கிருஷ்ணு!
த்யாகராஜநுதுடு அனி—த்யாகராஜனின் நண்பனுயுள்ள
ஸ்ரீ கிருஷ்ணன் என்று
தருணுலு—பெண்மணிகளாகிய நாங்கள்
அதிப்ரேமதோ வச்சிதிமி—மிகுந்த ஆவலுடன் உன்னிருப்
பிடம் வந்தடைந்தோம்
போகிசயன!—ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டவனே!
மாமாடலு மீரகு—எங்கள் வார்த்தைகளைத் தட்டாதே
ஸுமி—நன்ருகக்கேள்.
புத்திசாலிவெளது—புத்திசாலியாக நடந்து கொண்டுவர
முயற்சிசெய்

III

முன் கதைச் சுருக்கம்:—கண்ணன் வேணு கானத்தைக் கேட்டுப் பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனு தீரம் சென்று அங்குள்ள ஓடத்தில் அவனுடன் ஏறிக்கொண்டு தங்கள் பாக்யத்தை எண்ணி மகிழ்ந்து ஓடப் பாட்டு பாடிக்கொண்டு ஓடத்தை நடத்தலானுர்கள். அப்போது கண்ணன் கோபியர்களை சோதிக்க எண்ணி,

"குஸுமபு வாஸனல் விஸர—கோகில நாதமுலிந்தும் ரோயகா
கொஸஞ்சு மிம்மு வேடுசுனு—கோர்கெலு தீர்பனுநா ஸரெவ்வரே
யசத்ருசமைன மீ ஸொகஸு—லப்ஜ ப்வாதுலகைன கல்குனே
மஸலக சில்க கோலலனு—மாடிகி பச்சிம திக்கு னுஞ்சரே."

கோபியர்களே, புஷ்ப வாசனைகள் வீசவும், கோகிலம் கூவவும் இவ்வழகியவேளையில் உல்லாஸமாகப் பொழுது போக்கும் உங்களுக்கு என்னைவிட சரியான துணை யார் இருக்கிருர்கள்? உங்கள் அழகு ப்ரஹ்மாதிகளுக்கும் கிடைக்குமா? நீங்கள் துடுப்புகளை மேற்கு பக்கமாகப் போட்டு ஓடத்தை விரைவாக நடத்துங்கள்" என்று கூறினுர்.

அதற்கு கோபியர்கள்,

ஸொகஸுல கேமி நினு நம்-மகரார்தப கீர்த்திகாதெ பஹுலோபல நீ
வகலெல்ல கட்டி பெட்டுமு-நகதர மாவவத்தனிங்க நடவது ஸும்மீ

"ஏ க்ருஷ்ணு! எங்கள் அழகைப்பற்றி உனக்கென்ன வந்தது. இவ்வுலகில் உன்னை நம்பக் கூடாதென்பது ப்ரஸித்தமாகப் போனதே. உன் விஷமங்களைக் கட்டிவை. உன் யோசனைகள் ஒன்றும் எங்களுக்கு வேண்டாம். உனது யுக்தி எங்களிடம் பலிக்காது" என்று கூறினுர்கள்.

சாலுசாலு;—இது நௌகா சரித்திரம் 9-வது கீர்த்தனம்.

இக் கீர்த்தனத்தால், துடுப்புகளை மேற்குப் பக்கம்போட்டு அதன் விளைவாக ஓடம் ப்ரவாகத்தில் மூழ்கும்படி செய்ய யத்தனிப்பதாக எண்ணி க்ருஷ்ணன் பேரில் கோபம்கொண்டு கோபிகைகள் அவன் செய்கையைக் கண்டிக்கின்றனர்.

புதரக்ஷக:—கர்ணனுக்கு சல்யன் சாரதியாக அமர்ந்து இன்னல் விளைத்ததுபோன்று கண்ணன் தங்களுக்கு ஓடத்தை நடத்துவதில் யுக்திசொல்லிக்கொடுக்கிருனே என்று கோபிகைகள் வருத்தங்கொள்கின்றனர்.

ஸல்யன் சாரத்யம் செய்த விநோதத்தை மகா பாரதம் கர்ண பர்வத்தில் விரிவாகக் காணலாகும்.

ராகம் ஸாவேரி IV மிச்ர சாபு தாளம்

(15-வது மேள ஜன்யம்— ஆ. ஸரிமபதஸ் அவ ஸம்பூர்ணம்.)

பல்லவி

; பா தா	ஸ்ா ; ஸ்ா நீ	தா பா ;	பா : தா நீ
சா .	லு சா .	. . லு	நீ . .
தா ; பம	பா ; தா ;	பா. த பம	காரீ ரீஸா
. யுக் .	து லு	ந . ட . .	வ . து .
; ஸா ரீ	காஸா ரீஸா	ஸநி தா ;	ஸாரீ மா ;
ஸா .	ர . ஸா .	. . க்ஷ	க்ருஷ் .
பத நீ பா	தா ; மபதா	தபம கா	; ரீ ஸா ;
ண . .	. . .	. . . .	. .

அனுபல்லவி

; ; பம	பா ; தா ;	தா ஸ்ா ;	ஸ்ா ; ஸ்ா ;
சூ .	ல த	ரா .	து ல
; ஸ்ா ரீ	க்ா ஸ்ா ரீஸ்ா	ஸ்நிரி ஸ்ாரி	ஸ்நிபா . தா ;
கரு	ணீத . ன .	ம . மு . .	கூ . . டி
; பாதா	தாநீ ஸ்ா ;	ஸ்நிரி ஸ்நித	தாபா பா ;
ஸு க	மு . ல	னு	ப . விம
பா ; தா	தரிஸ்ா ஸ்நிதா	பா, தபம	தாபா தா ;
ப .	வே	ஸ்ரீ . .	க்ருஷ் . ண

சரணம்

; ஸா ரீ	மா ; ; பா	பா பா மா	தா பா தா ;
அ த	ர . ர	த ன .	மு . ல
; ; தா	பா ; ; தா	பா, தபம	காரீ ரீஸா
க	னி ஸொக்	கு சு . .	மே . . மு .
; ஸா ரீ	காஸா ரீ ;	ஸநி ரிஸநித	ரீஸா ரீ ;
ஆ .	ஸிஞ் .	சி	வச் . .
ஸா ஸா ரீ	மா ; பா, த	நீ பா தா	தபமா பா ;
சி தி .	மி . .	. . .	. . .

(இதற்கு மேல் அனுபல்லவி போன்றது.)

ராமபாணம்

★

(ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்)

ராமாயண பாரதக்கதைகள் இத்தனை விதமாகத்தான் இலக்கியத்தில் புகுந்துகொண்டிருக்கின்றன என்பதற்கு அளவே இல்லை. காவியமானாலும் சரி பிரபந்தமானாலும் சரி, தோத்திரமானாலும் சரி சாத்திரமானாலும் சரி எல்லாவற்றிலும் ராமனும்கிருஷ்ணனும், வீமனும் அருச்சுனனும் உலா வருகிறார்கள். சங்கீதத்தில், சிற்பத்தில், பரதநாட்டியத்தில் கிருஷ்ணனுடைய லீலைகளையும், ராமனுடைய வீரச்செயல்களையும் விலக்கி விட்டால் அந்தக் கலைகள் ஜீவனற்று ஒளியிழந்து சோருமென்று சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை. பாரத பூமியின் மண்ணின்சாரத்தோடு இந்த இதிகாசக்கதைகள் கலந்து செடியாகவும் கொடியாகவும் மரமாகவும் பூம்பொழிலாகவும் பரிணமித்து வளர்ந்தோங்கி நிற்கின்றன.

ராமனுடைய பெயரைச் சொன்னாலே அழகு தானாக வந்து விடுமோ என்னவோ! வடமொழியிலே காவிய ருசி நிரம்பி நிற்கிறது வால்மீகி ராமாயணம் என்றால், தமிழிலே கூடக் கம்பர் பாடிய ராமகதைக்குத்தானே புலவர்களெல்லாம் சேர்ந்து மணிமுடி சூட்டுகிறார்கள்! ஹிந்தி மொழியிலே துளஸிதாஸர் பாடிய ராமசரிதத்திற்கு உள்ள பெருமதிப்பை அளவிட முடியுமா?

படித்த புலவர்களும், கவி பாடும் கவிஞர்களும் ராமகதையிலே மகிழ்ந்து போகிறார்களென்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அரிச்சுவடியைக் கையால் தொட்டும் பாராத நிரக்ஷர குக்ஷிகள், சோற்றுக்குத் திண்டாடிப் புலைத்தொழில் புரிந்து வயிறு வளர்க்கும் ஜனங்கள், காட்டுமிராண்டிகளென்று நாகரிகமக்கள் நாமகரணம் செய்யும் பூர்வகாலக் குடிகளின் பரம்பரையினர் — இவர்களிடையேயும் ராமனது பிரபாவம் பரவியிருக்கிறதுதான் பெரிய ஆச்சரியம். பாரததேசத்தில் ஒவ்வொரு பாஷையிலும் ராமாயணம் இருக்கிறது. ராமாயணத்திற்கு இலக்கிய உலகத்தில் ஒரு சிறந்த இடம் எங்கும் உளது. அப்படியே பலபாஷைகளிலும் உள்ள நாடோடி இலக்கியத்திலே ராமனுடைய புகழ் நிச்சயமாக விரவிக் கிடக்கிறது.

தமிழில் ஏற்றப்பாட்டிலும், தாலாட்டிலும், குழந்தை விளையாட்டிலும், வேறு வகையான கிராமப் பாடல்களிலும் ராமாயணத்தின் நறுக்குகளைப் பார்க்கலாம். ராமாயணப் பூம்பொழிலில் பறித்துக் கொண்ட இதழ்கள் அவை. ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல், முன்பின் தொடர்ச்சியும் முறையும் இல்லாமல் ராமனுடைய பெயரையும் வீர விளையாட்டையும் பின்னிப் பிணைத்துப் பாடும் நாடோடிப் பாடல்கள் பல.

* * * *

ராமபாணத்தின் பெருமையை இலக்கியத்தில் பல பல இடங்களில் பல பல உருவத்தில் நாம் வாசிக்கிறோம். ஒரே சமயத்தில் பல லக்ஷியங்களை ஊடுருவிச் செல்லும் ராமபாணத்தின் ஆற்றலைக் கம்பர் எவ்வளவு இடங்களில் எவ்வளவு நயமாக வருணிக்கிறார்!

"உலையுருவக் கனல்உமிழ்
கட் டாடகைதன் உரமுருவி
மலையுருவி மரமுருவி
மண்ணுருவிற் றொருவாளி"

என்று விசுவாமித்திரர் கூற்றாக வைத்துப் பால காண்டத்திலேயே ராமாயணப் பிரபாவத்தை ஆரம்பித்து விடுகிறார்.

அந்த அம்பின் திறமையை உணர்ந்த தமிழர்கள் பல ஏடுகளை ஒருங்கே துளைத்துச் செல்லும் ஒரு பூச்சிக்கு ராமபாணம் என்ற பெயரை வைத்து விட்டார்கள். நூற்றுக்கணக்கான ஏடுகளை ஒரே மாதிரி துளைத்து ஊடுருவிச் செல்லும் அந்தப் பூச்சிக்கு இந்தப் பெயர் பொருத்தமாயிருக்கிறதென்று அவர்கள் நினைத்தார்கள்.

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்ற பழமொழி எப்படி வந்தது, எண்ணிப் பாருங்கள். காகாசுரவதத்தில் ராமபிரான் ஒரு துரும்பைக் கிள்ளிப் பாணமாகப் பிரயோகித்தானல்லவா? அந்தப் புல்லே பாணமாகிக் காகாசுரனைப் படாதபாடு படுத்தின கதையிலிருந்துதான் அந்தப் பழமொழி பழுத்துவந்திருக்கிறது.

ராமபாணம் பெரிய காரியங்களையெல்லாம் சாதித்தது. சிறிய காரியத்திற்காகப் பெரிய கருவியை உபயோகித்தால் "சிட்டுக் குருவிக்கு ராமபாணமா?" என்று பழமொழி சொல்லிப் பரிகசிப்பது நம் நாட்டார் வழக்கம். "குருவிக் கேற்ற ராம சரம்" என்று மற்றொரு பழமொழியும் தமிழில் உண்டு. இப்படிப் பெயரிலும் பழமொழிகளிலும் ஒளிரும் ராமபாணம் நாடோடி இலக்கியத்திலே விளங்கும் விதத்தை இரண்டு உதாரணங்களிலே பார்க்கலாம்.

* * * *

குழந்தைகளுக்கு வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்கும் தாய்மார்கள் அதற்கென்று சில பாட்டுகளைச் சொல்லித் தருவார்கள். அந்தப் பாட்டிலே பொருள் தொடர்போ, அபூர்வமான கருத்தோ இருக்கவேண்டுமென்பது அவசியமன்று. வார்த்தைகள் குழந்தைகளின் நாவிலே புரளவேண்டுமென்பதுதான் அவர்கள் கருத்து. இந்தக் காலத்திலே அந்த வார்த்தைகளை அச்சிட்டுப் பக்கத்திலே படம் போட்டுப் பாடபுஸ்தகமாக்கிக் குழந்தைகள் கையில் கொடுக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு முதல் முதலில் உபாத்தியாயராக இருப்பவள் தாய்தான். அவள் குழந்தைக்குப்போதிக்கும் கல்வி என்றும் மறவாத வண்ணம் மனத்திலே பதிகிறது. ளகாரணகாரங்களைக் குழந்தைகள் நாக்கு நுனியை மடித்துச் சுருட்டிச் சொல்ல வேண்டியிருப்பதால் சிறிது சிரமமுண்டாகும். சிரமம் தோன்றாமல் அந்த இரண்டு எழுத்தும் வரும்படியான வார்த்தைகளை ஒரு பாட்டிலே வைத்துக் கோத்துச் சொல்லிக் கொடுப்பது பழங் காலத்துத் தாய்மார்களின் வழக்கம்.

கும்ப கோணமே கோணம்
குறவன் நட்டதே சோளம்
ராமர் விட்டதே
பாணம் — அது
எங்கே போச்சுதோ
காணம்

என்று பாட்டாக வருகிறது தாய்மாரின் போதனை. கோணம், சோளம், பாணம், காணம் என்ற வார்த்தைகள் ஒவ்வோரடியின் இறுதியிலும் பொருந்திப் பாட்டின் தாளத்தோடு ஒன்றாகி ஒலித்துக் குழந்தைகளுக்கு உற்சாகத்தை உண்டாக்குகின்றன. முதல் இரண்டடியிலே உள்ள கும்பகோணத்திற்கும், குறவன் நட்ட சோளத்திற்கும் அர்த்தத்தில் ஒரு சம்பந்தமும் இல்லை. ஆனால் பின் இரண்டடியிலும் அர்த்தம் தொடர்ந்து வருகிறது. சொற்பழக்கத்தோடு தாய் குழந்தைக்கு ராமபாணத்தின் பெருமையையும் உணர்த்துகிறாள். ராமபாணம் அதன் உள்ளத்திலே இனிமையாகப் பதிகிறது.

* * * *

ஏற்றப்பாட்டு ஒன்றில் ராமபாண மகிமையைச் சொல்கிறது. அந்தப் பாணம் இடியைப் போல இடித்து வருமாம்; காற்றைப் போலக் கடுகி வருமாம்; மழையைப் போலத் தொகை தொகையாக வருமாம்; இப்படி வெளிப்படும் பாணத்

தை ராமன் பூட்டும் போது பொன்னைப் போல அழகாகக் கண்ணைப் பறித்துக் கொண்டு வில்லிலே அமர்ந்திருக்குமாம். இந்த இயல்புகளைப் பின் வரும் அடிகள் புலப்படுத்துகின்றன.

இடியைப் போலப் பாணம்
விடுவார் ரகுராமர்
காற்றைப் போலப் பாணம்
கணைகளைத் தொடுப்பார்
மழையைப் போலப் பாணம்
வரஅளிப்பார் ஸ்வாமி
பொன்னைப் போலப் பாணம்
பூட்டினரே தேவர்.

ஒவ்வோரடியும் ராம பாணத்தின் ஒவ்வோர் இயல்பைத் தெரிவிப்பதை நாம் கவனிக்க வேண்டும். இப்படியே ராம கதையின் மற்றப் பகுதிகளை விளக்கும் அடிகள் ஏற்றப் பாட்டில் அமைந்திருக்கின்றன. அவற்றைத் தொகுத்துப் பின்னே கொடுத்திருக்கிறேன்.

ராமரே துணைவர் ராகவரே தண்டம்
ரக்ஷிப்பதுன் பாரம் இரண்டுடனே வாரீர்.

* * * * *

உவமைஸ்தலம் பார்க்கப் பயணமென்றார் ராமர்
காசிநதி பார்க்கக் கடினம்பண்ணார் ராமர்
வையகங்கள் பார்க்க வரதர்போல நின்றார்
சீமைஸ்தலம் பார்க்கச் சீதைபோறே னென்றாள்
அங்குதய ஹனுமார் ஆண்டவன் பெருமாள்
அழகுடன் பயணம் பங்குஷமா லாலி (?)
வரதர்போல நின்றார் இருப்தியா லோண்ணு.

* * * * *

ஏழைபோல ராமர் இருந்தார் கானகத்தில்.

* * * * *

எழுதினாளே சீதை இலங்கையின் அழகை
ராவணன் அழகை ராக்ஷஸர் குணத்தை
எழுதிஒப்ப மிட்டாள் இளங்கொடியாள் சீதை
படித்துஒப்ப மிட்டாள் பசுங்கிளியாள் மாது
ராவணன் அழகை ராக்ஷஸர் பிறப்பை
எழுத்துள்ளவர் ராமர் தனக்குள்ளவள் சீதை.

* * * * *

இடியைப்போலப் பாணம் (அவர்) விடுவார் ரகு ராமர்
காற்றைப்போலப் பாணம் கணைகளைத் தொடுப்பார்
மழையைப்போலப் பாணம் வரஅளிப்பார் ஸ்வாமி
பொன்னைப்போலப் பாணம் பூட்டினரே தேவர்.
ஒருவர் கண் ஒளிர்வு உலகம்பதி ஞலும்
சீதை கண் ஒளிர்வு சீமைபதி ஞலும்.

'ப்ளேடி'ன் ஆயுளை நீடிக்க

★

அரையணுவுக்கும், காலணுவுக்கும் விலை போகாமல் சந்தி சிரித்த இந்த க்ஷவர ப்ளேடுகளுக்குத் தான் இப்போது என்ன கிராக்கி! முன்பு 10 ப்ளேடுகளை வாங்க என்ன செலவாயிற்றோ அது இப்போது ஒரே ஒரு ப்ளேடின் விலையாகி விட்டது. அப்படியே விலை கொடுத்தாலும் நமக்குத் தேவையான தினுசில் அவை கிடைப்பதில்லை. இந்த நெருக்கடியைச் சமாளிப்பதெப்படி?

புதிய ப்ளேடு ஒன்றைஎடுத்து உபயோகப்படுத்து முன் அதை நன்றாக வடிகட்டி சுத்தப்படுத்திய ஜலத்தில் போட்டு காய்ச்ச வேண்டும். 5 நிமிஷங்களுக்குப் பின் அதை வெளியே எடுத்துவிடவேண்டும். ஒவ்வொரு முறையும் க்ஷவரம் செய்துகொள்ளு முன்பாக நேராகவுள்ள கண்ணாடி டம்ளரிலோ அல்லது ப்ளேடு தீட்டுவதற்காகவுள்ள கண்ணாடியிலோ கொஞ்சம் கடுகு எண்ணெயையோ அல்லது தேங்காய்எண்ணெயையோ ஒரு துளித் தடவி தீட்டிக்கொள்ள வேண்டும். ஒரு நிமிஷம் தீட்டினால் போதும். ப்ளேடு விஷயத்தில் இப்படிச் சிறிது கவலை எடுத்துக் கொண்டால் ஒரு ப்ளேடு ஒரு மாதத்துக்குமேல் உழைக்கும்.

மழுங்கிய ப்ளேடுகள் கூர்மையாக:— நேராகவுள்ள கண்ணாடி டம்ளரில் கொஞ்சம் ஜலத்தை வைத்துக் கொள்ளவேண்டும். ப்ளேடை அதில் போட்டு ஒரு விரலை அதில் அமுக்கிக் கொண்டு கண்ணாடியின் பக்கவாட்டில் முன்னும் பின்னுமாக சுமார் 10 தடவை தீட்ட வேண்டும். ப்ளேடை உபயோகித்த பின் அதற்கு எண்ணெய் தடவி வைப்பது நல்லது.

"அவனைப்போல புஷ்டியாக இருக்க வேண்டும் என்று நீ விரும்பவில்லையா?"



அவன் அழகும், பலமும் பொருந்திய தன் குழந்தையைப் பற்றி பெருமை பேசிக்கொள்வது நியாயம்தான். அவன் எப்பொழுதும் பூரண சக்தியுடன் இருப்பதற்கு அவள்தான் காரணம் என்று அவளுக்கே தெரியும். குறைந்து போன சக்தியை குழந்தை உடனே பெறும்படி செய்யாவிடில் அது வெகு சுலபமாக களைப்படைந்து விடும். அப்படி இழந்த சக்தியை திரும்பவும் குழந்தை அடையும்படியான ஆகாரத்தை தாயார் ஒருவள் தான் அளிக்க முடியும். அப்படிப்பட்ட சமயத்தில் சக்தியை அளிக்கவல்லதும், விடமினுடன் கூடினதுமான டால்டா ஓர் வரம் போன்றது. விடமினுடன் கூடிய போஷாக்கை அளிக்கவல்ல ஆகாரம்தான் இழந்துபோன சக்தியை திரும்பவும் அளிக்கும். டால்டாவினால் ஆகாரத்திற்கு சேர்க்கப்படும் சத்தும், விடமினும் எப்பொழுதும் சக்தியைப் பாதுகாத்து, அதிக சக்தி கொடுக்க ஹேதுவாகிறது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் சக்தி அவசியம். டால்டாவினால் செய்த உணவை எல்லோரும் இன்பமுடன் விரும்புகிறார்கள்.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது... விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த டால்டா தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாத முள்ளது
— சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 19-381 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

திட்டமான வாழ்க்கை

★

வ. ரா.

நண்பர் இப்பொழுது, நாள் தவருமலும் மணிக் கணக்கு தவருமலும் வந்துவிடுகிருர். வரும்பொழுது, அவருக்கு எவ்வளவு உற்சாகம் இருக்கிறதோ, அவ்வளவு இருப்பதில்லை அவர் போகும்பொழுது. காரணம் கேட்டால், மூளைக் குழம்பிப் போகிறது என்கிருர். இப்படித்தான், நம்மவர்கள், தலைமுறை தலைமுறையாக, கொஞ்சம் கொஞ்சம், மூளை குழம்பிப் போனுர்கள். அந்த சிறு குழப்பங்கள் எல்லாம் சேர்ந்து, இப்பொழுது, மலையைப்போல ஆகிவிட்டன. நண்பர் வந்ததும், திடுக்கிடும்படியாக, என்னை ஒரு கேள்வி கேட்டார்.

நண்பர்:—இரு கட்சிகள் கை கலந்தால், எந்தக் கட்சிக்கு வெற்றி கிடைக்கும்?

நான்:—என்ன! யுத்த நுட்பங்களை ஆராயப் புகுந்துவிட்டீர்?

நண்பர்:—பொதுவாகச் சொல்லுங்களேன்? நுட்பங்களுக்குள் புக வேண்டிய தேவை இல்லை.

நான்:—சரி! எந்த கட்சிக்கு ஆள் பலமும் ஆயுத பலமும் அதிகமாக இருக்கிறதோ, அந்தக் கட்சிக்கு நிச்சயமாக ஜயம் கிடைக்கும்.

எதை நண்பர் மனதில் நினைத்துக்கொண்டாரோ என்னவோ, அவர் சிறிது பொழுது தலையை அசைத்துக் கொண்டிருந்தார். பிறகு,

நண்பர்:—நிபுணர்கள் சிலர், சாதாரண மனிதர்களில் நூற்றுக்கணக்கானவர்களை வெருட்டி அடிக்கமுடியாதா?

நான்:—அது வீண் கனவு: முண்டனுக்கு இரண்டு ஆள் என்பதுதான் உண்மை.

நண்பர்:—அன்றைக்கு நீங்கள் சொன்னது இப்பொழுது நினைவுக்கு வருகிறது. ஹிந்துஸ்தானத்தில் வசிக்கும் ஹிந்துக்கள் கோடிக்கணக்கில் இருந்தும், அவர்கள், அந்நியர்களால் அடிபட்டு ஏன் தோல்வியைப் பெற வேண்டும் என்று நீங்கள் அன்றைக்கு கேட்டீர்களல்லவா?

நான்:—நன்ருக நினைவு இருக்கிறது. நல்ல சமயத்தில், அதை நீர், என் நினைவுக்கு கொண்டு வந்தீர்.

நண்பர்:—எப்படி?

நான்:— கோடிக்கணக்கில் வாழ்ந்த ஹிந்துக்கள், ஆயிரக் கணக்கில், இந்த நாட்டின் பேரில் படை எடுத்து வந்த அந்நியர்களிடம் உதை வாங்குவது என்பதற்கு அர்த்த முண்டா என்று யோசித்துப் பாரும்.

நண்பர்:—சற்று முன் தானே, நீங்கள் சொன்னீர்கள், படை வலுவும் ஆயுத பலமும் இருக்கும் கட்சிதான் வெற்றி பெறும் என்று? அப்படியிருந்தும், ஹிந்துக்கள் ஏன் வெற்றி பெறவில்லை?

நான்:—என்னை ஏன் கேட்கிறீர்? பழைய வாழ்க்கையை இம்மியளவுகூட மாற்றக் கூடாது என்று தவளைகளைப் போல் கத்திக் கொண்டிருப்பவர்களை போய்க் கேளும்,

நண்பர்:—நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் குறிப்பிடும் கூட்டம் சிதைந்து கொண்டே வருகிறது.

நான்:—சரி! சொல்லுகிறேன் கேளும்.

ஜாதி உணர்ச்சியால் வந்த கேடு

நண்பர்:—சொல்லுங்கள்.

நான்:—நமது தேசம் என்பது பெரும்பான்மையில், கிராமங்கள். ஏதோ சில நகரங்கள் இப்பொழுது தோன்றியிருக்கலாம். பண்டைய இந்தியா, கிராமங்கள் நிறைந்து அடர்ந்துகிடந்த இந்தியா.

நண்பர்:—ஆமாம்!

நான்:—நமது கிராமங்களின் அமைப்பைப்பற்றி; நீர் யோசித்ததுண்டா?

நண்பர்:—யோசித்ததில்லை.

நான்:—இப்படியே யோசிக்காமல் இருந்ததனுலேதான், அந்நியர்கள், இந்த நாட்டை பல வகைகளிலும் பந்தாடப் பார்க்கிருர்கள்.

நண்பர்:—யோசிக்காதது தவறு தான். சொல்லுங்கள்.

நான்:—கிராமம் என்பது நத்தம், சேரி என்று இரண்டு கூறுகளாகப்பிரிக்கப்பட்டது.

நண்பர்:—நத்தமா? அது என்ன?

நான்:—இங்கிலீஷ் படித்து, நகரத்திலேயே வளர்ந்த கோளாறினுல், உம்மைப் போன்ற ஆயிரக் கணக்கானவர்களுக்கு, நத்தம் என்ருல் தெரியாது.

நண்பர்:—வருத்தப் பட்டுக் கொள்ளாமல், மேலே சொல்லுங்கள்.

நான்:—நாகரிகப்படித் தரத்தில், மிகக் கேவலமான நிலைமையில் இருக்கும் நாட்டார்கள், நம்மவர்களை சதா வெருட்டி வந்த கதை, இந்த கிராம அமைப்பில் அடங்கியிருக்கிறது. அதை நினைக்கும் பொழுது மனதுக்கு ரொம்பவும் இம்சையாயிருக்கிறது.

நண்பர்:—சொல்லுங்கள்.

நான்:—நத்தம் என்பது கிராமத்தின் முக்கியமான பகுதி. அதில், ஜாதி ஹிந்துக்கள் வசிக்கிருர்கள். நத்தத்திலும், அக்கிரகாரம், குடியானத் தெரு என்று இரண்டு பிரிவுகள். சேரியில் வசிப்பவர்கள் ஹரிஜனங்கள் (தீண்டத்தகாதவர்களாக இருந்தவர்கள்!)

நண்பர்:—எனக்கு, இதைக் கேட்டதும் 'சுரீர்' என்கிறது.

நான்:—அக்கிரகாரததுக்கும், குடியானத் தெருவுக்கும் தொழில், பண சம்பந்தமான உறவு இருக்கலாம். ரத்த சம்பந்தமான உறவு இருப்பதாகவே இரண்டு தரப்புகளிலும் நினைப்பதில்லை. சேரிக்கும் நத்தத்துக்கும் சம்பந்தமே கிடையாது. சேரியிலே, ஹரிஜனங்கள் தனித் துண்டாக வாழ்கின்ருர்கள். நத்தத்தின் நன்மை, தீமைகளில் அவர்கள் கலந்துகொள்ள முடியாது.

நண்பர்:—நீங்கள் விவரமாக சொல்லச் சொல்ல, 'பகீர்' என்கிறதே!

நான்:—முஸ்லீம்கள் என்ருல் எல்லாரும் முஸ்லீம்கள். கிறிஸ்தவர்களும் அப்படியே; ஆனுல், ஹிந்துக்கள் என்ருல் எத்தனை கூறுகள்! அதுவும் பரஸ்பரம் விரோதிகள் என்பதைப் போல நடந்து கொள்ளும் கூறுகள்! என்ன அநியாயம்!

நண்பர்:—வேற்றுமைகள் இருந்தும், ஹிந்துக்கள் எல்லாரும் ஒற்றுமையுடன் இருக்க முடியாதா? இருக்கக் கூடாதா?

நான்:—தயை செய்து, மேடைப் பிரசங்க வேலை செய்யாதேயும்.

நண்பர்:—எப்படி மேடைப் பிரசங்க வேலை தவருகி விடும்!

நான்:—நீர் சொல்லுவது எல்லாம் எழுத்தில், இலக்கியத்தில் அழகாக இருக்கலாம்; ஆனுல், அனுபவத்தில் கட்டி வராது.

நண்பர்:—ஏன்?

நான்:—அக்கிரகாரத்தில் சொல்லுவதை நீர் கேட்டதில்லைபோலிருக்கிறது. அக்கிரகாரத்துக் குழந்தைகள் குடியானத் தெரு பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடக் கூடாது என்பார்கள். அக்கிரகாரத்து குழந்தைகளோடு சேரக்கூடாது என்று குடியானத்தெருவில் கட்டுப்பாடு. நத்தத்தில் வாழும் எவரும் சேரியில் வசிக்கும் ஹரிஜனங்களோடு, தொழில் சம்பந்தத்தில் தவிர வேறு எவ்வகையிலும், நெருங்கிப் பழகக் கூடாது. இப்படி வாழும் மக்களுக்குள் ஒற்றுமையும் பரஸ்பர அபிமானமும் நம்பிக்கையும் இருக்குமா அல்லது ஏற்படுமா, சொலலும்.

நண்பர்:—அதனுலே—

நான்:—சேரியிலே, காலரா வந்தால், அதைப்பற்றி நத்தத்தில் கவலை இல்லை. அக்கிரகாரத்தில் கொள்ளை நேர்ந்தால், அதைப்பற்றி, மற்றவர்களுக்கு அக்கரை இல்லை. வருமானம் போதாமல், குடியானவர்களும் ஹரிஜனங்களும் அயல் நாடுகளுக்கு, கூலிகளாகப் போய் கஷ்டப் பட்டால், அதைப்பற்றி அக்கிரகாரம் துளிக்கூட கவனம் செலுத்துவதில்லை.

நண்பர்:—கேட்க கேட்க துக்கமாயிருக்கிறது.

நான்:—பார்ப்பாரத் தெய்வம், பள்ளித் தெய்வம், பறத் தெய்வம் என்று கடவுளையே பிரித்து வர்ணிக்கிருர்கள். வீரன், இருளன், காட்டேறி, பறத் தெய்வங்களாம்! கறுப்பு, ஐயனுர், அகங்காளி அம்மனி போன்ற தெய்வங்கள் குடியானவர்களின் தெய்வங்களாம்! நடராஜர், சுப்பிரமணியஸ்வாமி போன்ற தெய்வங்கள் பார்ப்பாரத் தெய்வங்களாம்! தெய்வத்தைக் கும்பிடுவதில்கூட, கிராமத்தில் வசிக்கும் ஹிந்துக்களுக்கிடையே, ஒற்றுமை உணர்ச்சி இல்லாமல் போனுல், அதனுல் விளையும் கேடுகளை அளந்து சொல்ல முடியுமா?

நண்பர்:—அப்புறம்!

நான்:—பாஷையிலும் வித்தியாசம்! அக்கிரகாரத்தமிழ்; குடியானத் தெருத்தமிழ்; சேரித்தமிழ். மக்களை ஒற்றுமைப்படுத்தக்கூடிய பாஷையிலேயே இத்தனை ஆபாசமான வித்தியாசங்கள் இருப்பின், அந்த சமாஜத்தைப் பற்றி, என்ன சொல்லுவது என்று தெரியவில்லை.

நண்பர்:—மற்ற தேசங்களில் இப்படியொன்றும் இருந்ததில்லையா?

நான்:—அசட்டுத்தனங்களை களைந்து எறிவதற்கு மற்ற தேசங்களின் சரித்திரம் கூடத் தேவையா? தனித் தனிக் கூறுகளாக, ஜாதி வேற்றுமையால் பிரிந்து கிடக்கும் ஹிந்துக்கள் கோடிக்கணக்கில், சென்ஸஸ் ரிப்போர்ட்டில் இருந்து என்ன பயன்? அந்நியன் கையாளுவது 'பிரித்து ஆள்' என்ற உபாயம். ஹிந்துக்கள் எப்பொழுதும் பிரிந்து கிடக்கின்ருர்கள். எனவே அந்நியனுக்கு அவர்களைப் பிரிக்க வேண்டிய தொல்லையே இல்லை. ஆளுகிற பாக்கியமும் பாத்தியமும் லேசில் அந்நியனுக்கு கிடைத்து விடுகிறது. ஹிந்துக்களின் வாழ்க்கையைப் பற்றி, என்ன சொல்லுவது என்று தெரியவில்லை.

நண்பர்:—நினைத்தால் மனதுக்கு துக்கமாய்த்தானிருக்கிறது.

நான்:—ராஜ்யமாளவேணும் என்ற நினைப்பே இல்லாமல், அடிமையாக இருந்தாலும் பாதகமில்லை என்ற முடிவுக்கு கொண்டு வந்து விட்ட ஜாதி உணர்ச்சியை, வேரோடு கெல்லி எறிந்தாலொழிய, நம்மவர்கள், கோடிக்கணக்கில் வாழ்ந்தாலும், அவர்களை, அந்நியர்கள் எளிதிலே, அடிமையாக்கிவிட முடியும்.

நண்பர்:—ஜாதி உணர்ச்சியை அடியோடு போக்குவது அவ்வளவுலேசான காரியமா?

நான்:—சுதந்திர வாழ்வும் சுகவாழ்வும் வேண்டாத முழு மூடர்கள் தான், ஜாதி வெறி பிடித்து அலைவார்கள். ஜாதியைக் காப்பாற்றுகிருர்களாம்! அசடர்கள்! அவர்கள் பொன் விளையக்கூடிய இந்த நாட்டை பிறர்களிடம் ஒப்படைத்து விட்டு, அவல வாழ்வு வாழ்கிருர்களே! இந்த அசட்டு ஜாதி உணர்ச்சியை மடியில் கட்டிக் கொண்டு, எந்த இங்கிலீஷ்காரனும் காரியம் செய்வானு?

நண்பர்:—அவர்களுக்குள் இந்த மாதிரி உணர்ச்சி கிடையாதா?

நான்:—துளிக்கூட இல்லை. இங்கிலாந்தின் பேரில் அந்நிய நாடு படை எடுத்து வருவதை, எந்த இங்கிலீஷ்காரனும் உயிரோடு பார்த்துக் கொண்டிருக்க மாட்டான். நாட்டைக் காக்க வேண்டும் என்ற சிறிய உண்மையைத் தெரிந்து கொள்ள, பரலோக ஞானமும் புடலங்காய்ப் புராணமும் தேவை இல்லை.

நண்பர்:—எப்பொழுதும் கொடுக்கில் விஷம்தான்!

தற்சமயம் இந்த சோப் கிடைப்பது அரிதாயிருக்கிற நிலைமை தாற்காலிக மானதே. கூடிய சீக்கிரம் இந்த அருமையான, இதமளிக்கும் ஔஷத சக்தி வாய்ந்த சோப் ஏராளமாகக் கிடைக்கும்.

RP, 20-111 TM REXONA PROPRIETARY LIMITED

"புஷ்பஹாரம்"

புதிய தொடர் கதை

★

கூடிய சீக்கிரம் 'மித்திரன்' வாரப்பதிப்பில் ஆரம்பமாகும்.

இந்தியாவின் ஸேவைக்கு



எங்கள் பழக்கமுள்ள விற்பனை ஆளர்கள்

தற்கால யுத்தத்திருல் எங்கள் ஸாமான் யாவற்றையும் எங்கள் தொழிற்சாலையின் வாயலிலேயே விற்கலாம். ஆனுல் நாங்கள் எல்லோருக்கும் சரிவர பங்கிட்டுக்கொடுப்பதில் சுணங்கவில்லை. அதற்கு எதிரிடையாக அப்படி எங்கும் பங்கிடுவதை விருத்திசெய்தோம். எங்களுடைய ஸாமான்களை தேவையுள்ளவர்களுக்கு எப்பொழுதும் கிடைக்கச் செய்வதும் வேண்டிய அளவிற்குமேல் வாங்கி சேகரித்து வைப்பதை நிறுத்துவதும் எங்கள் நோக்கம்.

எங்கள் பழக்கமுள்ள விற்பனை ஆளர்கள் பெரிய வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் எங்கள் சாமான்களை வைத்திருக்கிருர்களா என்று பார்க்க நாடெங்கும் பிரயாணம் செய்கிருர்கள். அவர்கள் உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிருர்கள். உங்களுக்கு வேண்டிய அளவிற்குமேல் நீங்கள் வாங்காதிர்கள். தேவைக்குமேல் வாங்கி வைப்பது சுயநலத்தையே கருதுவதாகும். அது உங்கள் நேயர்களுக்கும அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கும் வேண்டிய ஸாமான்களை கிடைக்கக் கூடாமல் செய்கிறது. தவிரவும் அப்படிச் செய்வது ஸாமான்களின் விலையை உயரச்செய்வதும் தினத்திற்கு வேண்டிய அளவிற்குமேல் வாங்கமுடியாத ஏழைமக்களுக்கு அதிகமான கஷ்டத்தை விளைக்கும். அடுத்த தடவை நீங்கள் வாங்கும்போது நீங்களே அதிக விலைகொடுத்து வாங்க நேரிடும். ஆகையால் எங்கள் ஸாமான்களை நியாயமான விலைக்கு விற்கவும் எல்லோருக்கும் சரிவர பங்கிடவும் செய்ய நீங்கள் உதவிபுரியவேண்டும்.

ஸாமான்களை உபயோகிப்பவர்களின் நன்மைக்காக

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனியாரால்

பிரசுரிக்கப்பட்டது.

TI. 4031.

பழைய இடத்திலேயே படுகுழி

ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன்

ஐரோப்பாவும் ஆசியாவும் சந்திக்குமிடத்திலுள்ள நாடுகள் சமீப கீழ்த் தேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஐரோப்பா சம்பந்தப் பட்ட வரையில் இது உண்மை; நமக்கு இவை சமீப மேற்கு தேசங்கள் தான். ஆனால் பெயர் வழக்கில் வந்து விட்டது; மாற்றுவது குழப்பத்தையே விளைவிக்கும். எனவே சம்பிரதாய வழியிலேயே நானும் இந்த நாடுகளை அழைக்கிறேன்.

உலகை அடக்கி ஆள ஹிட்லர் போட்டிருந்த திட்டம் பெரியது. முதலில் ஐரோப்பா. அது காலில் விழுந்ததும் ஆசியாவும் ஆப்பிரிக்காவும். இவ்விதமாக குணகோளார்த்தத்தை விழுங்கி விட்டு குட கோளார்த்தத்தின் மீது பாய அவர் உத்தேசம் கொண்டிருந்தார்.

ஐரோப்பாவை வசப்படுத்துவது பெரிய காரியமென்று அவர் நினைக்கவேயில்லை. மூச்சு விட்டால் அது காலில் விழுந்து விடுமென்று அவர் நம்பியிருந்தார். பழைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்தது அவருக்குத் தெரியும். அதன் குரல்வளை சூயஸ்கால்வாய். அதை அடைத்துவிட்டால் ஏகாதிபத்தியம் கோவிந்தாவாகி விடுமென்று அவர் எண்ணினார். அந்த இடத்திலேயே இடுக்கி போல இரு அச்சு தேசப்படைகளும் கூட வேண்டுமென்பது அவர் திட்டம். அவருடைய படை துருக்கி, ஸிரியா, பாலஸ்தீனம் வழியாக கால்வாயின் கீழ்க்கரைக்கு வரவேண்டும்; லிபியாவிலிருந்து எகிப்து வழியாக முஸோலினியின் படை மேல் கரைக்கு வந்து சேர வேண்டும்.

எனவே இந்த இடத்தில் துருக்கி முக்கிய கேந்திர ஸ்தானமாக இருந்து வருகிறது. அது பயந்தாங் கொள்ளியாகவோ அல்லது யார் எக்கேடு கெட்டாலென்னவென்றோ இருந்தால் வெகு சுலபமாக அதை ஹிட்லர் வசியப்படுத்தி விடக்கூடும். ஆனால் இன்றைய துருக்கி உறுதி கொண்டிருக்கிறது; தன் பலத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது; நேசதேசங்களுக்கு உற்ற நண்பனாக இருந்து வருகிறது. சென்ற இருபது வருஷ காலத்தில் பெரிய நெருக்கடி எதுவும் அங்கு ஏற்படவில்லை. வெளி நாட்டினரை ஒதுக்கி, நாட்டை சூழ்ச்சிகளிலிருந்து முஸ்தபா கமால் காப்பாற்றி வைத்திருந்தார். அவருக்குப் பின் பதவியேற்ற இனோனு அவரிடம் சிக்ஷையானவர்; சிறந்த ராணுவ வீரர்; ராஜ தந்திரத்தில் தேர்ந்தவர்.

பிரான்ஸ் விழ்ந்தது, அவருக்கு ஒரு கை ஒடிந்ததுபோலாயிற்று. அவர் நம்பியிருந்த வெளி உதவியில் பாதி அடிபட்டு போய்விட்டது; பிரெஞ்சு கடற்படைத்தளங்களை உபயோகித்துக்கொள்ள வசதியில்லாமல் போயிற்று. மேலும் அவருடைய கொல்லைப் பக்கத்திலிருந்த பிரெஞ்சு சேனையானது க்ஷணப்பொழுதில் விச்சி சேனையாக மாறிவிட்டது. டோடிகனீஸிலுள்ள பதின்மூன்று தீவுகளையும், துருக்கி அருகாமையிலுள்ள கிரேக்கத் தீவுகளில் இரண்டைத் தவிர மற்றவற்றையும் ஜெர்மானியர் தங்களுடைய தாக்கிக்கொண்டனர்; கடற்படை, ஆகாயப்படை தளமாகவிருந்த லெராஸை பெரிய கற்கோட்டையாக இத்தாலி செய்துகொண்டுவிட்டது.

ஹிட்லர் விரும்பினால் இவற்றில் எந்த இடத்திலிருந்தும் துருக்கி மீது பாயலாம்; பல்கேரியா, ருமேனியா இவற்றின் கருங்கடல் துறைமுக வசதியும் அவருக்கு இருந்தது. தரை வழியே அவர் பல்கேரியாவிலிருந்தும் அவர் தாவலாம். இவ்வித படையெடுப்பைச்சமாளிக்க துருக்கியிடம் நாற்பது டிவிஷன்கள் இருக்கின்றன. அவற்றிற்கு வேண்டிய ஆயுதபலத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் கொடுத்து உதவி வருகின்றன. நான்கு வாயில்களிலும் நல்ல வேலையாக நேச நாடுகள் இப்பொழுது இருந்து வருகின்றன.

வடக்கே ரஷ்யாவில் நாஸிப் படை நன்றாக மாட்டிக் கொண்டு விட்டது. மற்ற மூன்று வழிகளிலும் ஹிட்லர் முயற்சி பலிக்கவில்லை. பிரிட்டனையும் துருக்கியையும் அவர் பலஹீனப்படுத்த முடியவில்லை. இராக்கில் பேராசை பிடித்த கெய்லானி விச்சி பிரான்ஸ் கொடுத்த ஆயுதங்களையும் ஜப்பான் உதவிய பணத்தையும் கொண்டு கவர்ன்மெண்டைக் கவிழ்த்து, விமான நிலையத்தைத் தாக்கினார். இந்தப் புரட்சி ஒடுக்கப்பட்டுவிட்டது; அமைதி நிலை நாட்டப்பட்டுவிட்டது; ஆறு வயது இளவரசரான பெய்ஸலும் பீடத்தில் வைக்கப்பட்டார். இவ்விதம் பிரிட்டன் சரேலென்று அங்கு ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டதால் பர்ஷியன் விரிகுடாவுடன் துருக்கி தொடர்பு வைத்துக் கொள்ளுவது சாத்தியமாயிற்று யூப்ரடீஸ் நதி வழியே ஸிரியாவிலுள்ள டிரிபோலியில் சேரும் பெரிய எண்ணெய்க்குழாய்க்கும் பந்தோபஸ்து ஏற்பட்டது.

இராக்கிலிருந்து வெருட்டப்பட்ட நாஸி பாஸிஸ்டு ஆட்கள் இரானில் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தார்கள். ஐந்தாம் படையினரும் நாஸி ரகசியப் போலீஸ் டாபோ கோஷ்டியினரும், லஞ்சம் கொடுக்க பணமூட்டையை தோளில் தூக்கி திரிந்தவர்களும் நூற்றுக்கணக்கில் அங்கு குழுமினார்கள். ரிஸாஷா ஒரு கொடுங்கோல் மன்னன். ஹிட்லருக்கு ஏற்ற ஆள். அவர் மூலம் அந்த நாட்டில் ஹிட்லர் செல்வாக்கு பெருகிக் கொண்டிருந்தது. ரஷ்யாவையும் சேர்த்துக்கொண்டு பிரிட்டன் தலையிட்டது; நாஸிகள் வெருட்டியடிக்கப்பட்டார்கள்; ரிஸாஷா இப்பொழுது மோரிசு தீவில் வேண்டா விருந்தினராக இருக்கிறார். பர்ஷிய விரிகுடா வழியேயும் காஸ்பியன் கடல் மூலமும் ரஷ்யாவுக்கு ஆயுத உதவியை அனுப்ப கிரேட் பிரிட்டனுக்கு இதன் மூலம் வழி ஏற்பட்டது.

துருக்கியின் தென் பக்கத்துக் கொல்லை வாயிற்படியான ஸிரியாவிலும் ஹிட்லர் கிருபா கடாக்ஷத்தைச் செலுத்தினார். துருப்புகளை ஏற்றிச் செல்லும் விமானங்களை டமாஸ்கஸ் முதலிய நிலையங்களில் ஏராளமாக இறக்கினார்; பிரிட்டன் ஆக்ஷேபித்த போது அவர்கள் வேறு வழியில்லாது இறங்கியவர்களென்றும், நிலைமையில் எவ்வித மாறுதலுமில்லையென்றும் விச்சி சர்க்கார் நொண்டிச் சமாதானம் கூறினர். எனவே சுதந்திர பிரெஞ்சுப்படையின் உதவியைக்கொண்டு விமான நிலையங்களையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் பிரிட்டன் வசப்படுத்திக் கொள்ளவேண்டியதாயிற்று. அராபியருக்குப் பூரண சுதந்திர உறுதிமொழியின் பேரில் சுதந்திர பிரெஞ்சு அதிகாரிகள் அங்கு ஆதிக்கமும் பெற்றனர்.

இப்பொழுது யாரும் துருக்கியை முதுகில் குத்தாமல் காகஸஸ், இராக், இரான், ஸிரியா இவை அதைப் பாதுகாக்கின்றன. ஜெர்மனியுடன் துருக்கி ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்ள வேண்டி வந்தது உண்மையே. ஆனால் ரஷ்ய உடன்படிக்கையை ஹிட்லர் கிழித்தெறிந்த பிறகு துருக்கிக்கு அவரிடத்தில் நம்பிக்கை ஏற்படுமா? ஹிட்லர் மாய ஜாலங்களைச் செய்தும் துருக்கி அசைந்து கொடுக்கவில்லை.

அடுத்தது பாலஸ்தீனம். யுத்தத்துக்கு முன் யுத்தகளமாகவே விளங்கி வந்த நாடு; கொலைகள் மலிந்திருந்த நாடு, இரு தரத்தாரும், அதாவது யூதர்களும் அராபியர்களும், பிரிட்டன்மீது தோஷம் கூறி வந்தார்கள். இப்பொழுது அவர்கள் சண்டை நின்று விட்டது. இரு தரத்தாரும் நேச தேசத்தினருடன் சேர்ந்து பொதுவான சத்துருவை எதிர்த்துப் போராடுகிறார்கள். பாலஸ்தீனத்துக்குக் கொல்லைப் புறமான டிரானஸ் ஜார்டனில் பிரிட்டனின் நண்பரான எமீர் அப்துல்லா அரசாட்சி நடத்தி வருகிறார்.

நாஸிகளைக் கண்டு அராபியர் பயப்படுகிறார்கள்; பாஸிஸ்டுகளை அவர்கள் வெறுக்கிறார்கள். இத்தாலீய ஜெனரலான கிரேஸியானி விமானங்களிலிருந்து அபிஸீனியர்களைப் பொசுக்கினார்; லிபியாவில் ஸெனூஸி ஷேக்குகளை விமானங்களில் ஏற்றிப் போய், அவர்களுடைய கிராமங்கள் மீதே தள்ளினார். ஹிட்லர் கொடுமைகள் அதிகமாயினும் பத்திரிகைகள் வாயிலாகவன்றி நேரில் அராபியர்கள் அவற்றை பார்த்தவர்களில்லை. அச்சு இடுக்கி திட்டத்தின் முக்கிய லக்ஷியமாகிய சூயஸ் கால்வாயை நாம் இப்பொழுது கவனிப்போம். அது சர்வதேசங்களுக்கும் பொதுவான நீர் பாட்டை. யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் அதன் வழியாக எந்த தேசக்கப்பலும் போகலாம். ஆனால் 1936-ம் வருஷத்திய ஆங்கிலோ-எகிப்திய ஒப்பந்தத்தினால் எதிரி கப்பல்கள் அதிகமாக அதில் நுழைய முயற்சித்ததில்லை. அலெக்ஸாண்டிரியாவிலுள்ள கப்பல் தளத்தையும் தன்னுடைய ரயில் பாதைகள், ரஸ்தாக்கள், ஆயுதச்சாலைகள், விமான நிலையங்கள் இவற்றையும் பிரிட்டனிடத்தில் எகிப்து ஒப்புவித்திருக்கிறது. இந்த வசதிகளைக் கொண்டு எதிரிகளை பிரிட்டன் மும்முறை வெருட்டி அடித்திருக்கிறது.

லிபியா கடைசியில் உள்ள இடம். கிரேஸியானியின் அவமானத்தைப் போக்குக வேண்டியும் கெயிஸரின் பழைய வழியைப் பின்பற்றியும் முஸோலினி இந்த நாட்டில் மிகுந்த ஆடம்பரத்துடன் குதிரை மூலம் பிரயாணம் செய்தார். கையில் கத்தி ஏந்தி முஸ்லிம்களின் ரட்சகர் தாமே என்று வாய்ப்பந்தல் போட்டார். அந்த சூழ்ச்சி பலிக்கவில்லை.

ஜோஸியம் சொல்லக்கிளம்புவது சரியில்லைதான். ஆனால் பழைய யுத்த சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதில் பிசகொன்றுமில்லை. ஜெர்மனி அப்பொழுது சூயஸ் கால்வாயை அணுகிய போது பிரிட்டனும் துருக்கியும் யுத்தத்தில் இறங்க வேண்டியதாயிற்று. இந்தப் பிரதேசத்தில் நேச தேசங்களுக்குத் தோல்வி ஏற்பட்டது. வேறு இடங்களில் அவை முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டியிருந்தது. இருந்தாலும் அல்லென்பி சத்ருக்கள் மீது பாய்ந்து, ஸிரியா வழியே அவர்களை வெருட்டினார். டமாஸ்கஸில் லாரென்ஸ் காத்திருந்தார். யுத்தம் வடக்கே திரும்பியது. பல்கேரியா முதலில் பணிந்தது; அதைத் தொடர்ந்து ஆஸ்டிரியா-ஹங்கேரி விழ்ந்தது; கடைசியாக ஜெர்மனியே சாய்ந்தது. அந்த யுத்த சமாப்தி படலம் சமீப கீழ்த் தேசங்களிலேயே ஆரம்பமாயிற்று.

1940-ல் மத்தியதரைக் கடலில் பிரிட்டன் யுத்தத்துக்குத் துடிக்கவில்லை; இந்த யுத்தத்திலும் இந்தப் பிராந்தியத்தில் பிரிட்டனுக்குத் தோல்விகள் ஏற்பட்டன; வேறு முனைகளில் அது அதிகக் கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. இப்போது டிரிபோலி முதல் எகிப்து வரையிலும் இன்னும் கிழக்கேயும் ரஷ்ய எல்லை வரை அது அரணை ஏற்படுத்திக்கொண்டுவிட்டது. இந்தப் பிரதேசத்திலேயே பிறருக்காக வெட்டிய குழியில் அநேகமாக ஹிட்லர் விழலாம்.

பிரபல விவாஹம்

மதுரை மிராசுதாரும், பிரபல காங்கிரஸ்காரருமான ஸ்ரீமான் எஸ். பாலசுப்ரமண்யத்திற்கும், மதுரை அட்வகேட் ஸ்ரீமான் டி. நரசிம்மாச்சாரியார் புத்திரி சௌபாக்யவதி ஸீதாவுக்கும், மதுரைக்கருகிலுள்ள திருப்பரங்குன்றத்தில் 8—2—'43ம் தேதி திங்கட்கிழமையன்று விவாஹம் நடைபெற்றது.

தம்பதிகளை ஆசீர்வதித்து வாழ்த்துச் செய்திகளும், பல வெகுமதிகளும் அனுப்பப்பட்டிருந்தன.

பொய்யோ! மெய்யோ!!

"நீலம்"

உலகத்தின் எடை எவ்வளவு டன்?

உலகத்தை இரண்டே அடியாக அளந்து மூன்றாவதடியாக பலிச்சக்ரவர்த்தியின் சிரத்தில் பாதாரவிந்தத்தை வைத்து அளந்தார் பரமாத்மா. ஆனால் அந்த "பார் அளந்த திருமாயன்" உலகத்தை அளந்தாரேயன்றி தராசில் எடை போட்டதாகத் தெரியவில்லை! இப்பொழுது உலகத்தின் எடை எவ்வளவு என்று டன்களில் ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். இந்த சம்பவம் நடந்து சுமார் 100 வருஷங்களுக்குமேலாகிவிட்டன. இந்தமாதிரி எடை போட்டவர் லண்டன் வாஸி. பங்குவியாபாரத்தில் தரகராயிருந்தாராம்! 12 சதுர அடியுள்ள ஒரு அறையில் அவர் உலகத்தை நிறுத்தாராம்! அவரது பெயர் பிரான்ஸிஸ் பெய்லி. இவர் இந்த அற்புதக் கணக்கெடுத்ததுபற்றி எங்கும் ஒரே ஆச்சர்யம். அவர் விக்ஞானியல்ல; கேவலம் கணக்குக்கூட நன்கு தெரியாதாம்! ஆகவேதான் அவர் போட்ட கணக்கு கண்டு எங்கும் ஒரே பரபரப்பு! புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதில் இவரது நாட்டம் திரும்பியது: 25-வது வயதில் இங்கிலாந்துக்கு வந்தார். பங்குத் தரகராக தொழிலில் ஈடுபட்டார். கஷ்டப்பட்டு வேலை செய்தார். கிட்டியது செல்வம். பாங்கிமுறை, இன்ஷூரன்ஸ் முதலிய தொழில்களைப்பற்றி நன்கு விலை போகக் கூடிய புத்தகங்களை எழுதினார். 50-வது வயதில் தொழிலைவிட்டு விலகினார். எஞ்சிய நாட்களை வானசாஸ்திரத்தில் கழிப்பதென முடிவு செய்தார். வான சாஸ்திர சங்கத்தை ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவர். நட்சத்திரங்களை வரிசைக்கிரமமாக எடுத்து எழுதியதுகாரணமாக பிரான்ஸிஸ் பெய்லிக்கு விசேஷப்புகழ் கிடைத்தது.

உலகத்தை நிறுப்பதெப்படி? இது தான் பெய்லி முன் தோன்றிய பிரச்னை. இதைத் தீர்க்க 63-வயதில் முயற்சிசெய்ய ஆரம்பித்தார். லண்டனிலுள்ள அவரது வீட்டு அறையிலேயே இம்முயற்சி துவங்கியது. முதலில் 1½ வருஷம் வரை முயற்சி பலிக்கவில்லை.

ஒருநாள் தெருவில் போய்க் கொண்டிருந்தார். ஒரு தெரு வைத்தாண்ட யத்தனிக்கையில் அவ்வழியே 'நாலு கால்' பாய்ச்சலில் சென்ற குதிரை மோதியதால் தூக்கி எறியப்பட்டார். தெய்வாதீனமாக உயிர் தப்பினார். 5 மாதங்களுக்குப்பின் மீண்டும் தன் வேலையில் முனைந்தார்.

4 வருஷங்களுக்குப்பின் ஆயிரக்கணக்கான கணக்குகளைப் போட்டு தான் செய்த கணக்குச் சரிதானா வென்று சரிபார்த்தார். கடைசியாக அவர் உலகத்தின் எடை 1,256,195,670,000,000,000,000 டன்கள்! என்று கணக்குப் போட்டார்.

பேசும் கார்டுகள்!

நமக்குத் தினசரி எவ்வளவோ பேர்கள் கார்டு எழுதிப்போடுகிறார்கள். ஆனால் அவற்றைப் படிக்கத்தான் முடிகிறது! எழுதியவர்களே நேரில் விஷயத்தைத் தெரிவிப்பதுபோல் அவை இருப்பதற்கில்லை. இப்பொழுது கார்டுகளே பேசக்கூடிய தினுசில் தயாரிக்கப்படுகின்றன. மத்தியக் கிழக்கிலுள்ள சாம்ராஜ்யத்துருப்புகளுக்கு அவர்களது ஊரிலிருந்து "பிலிம்" கடிதங்கள் வருகின்றன. ரஷ்ய ஸோல்ஜர்களுக்காகப் பல தீபாலாபீஸ்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸோல்ஜர்களுக்கு அவர்களது வீடுகளிலிருந்து வரும் தபால் கார்டுகள் எல்லாம்பேசுகின்றனவாம்! மாஸ்கோவில் ஒரு ஒலிப்பதிவு ஸ்டூடியோ இருக்கிறது. இங்கு ஸோல்ஜர்களின் உறவினர்களும், வேண்டியவர்களும் வருவார்கள். தங்கள் உறவினர்களான ஸோல்ஜர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தகவல்களைச் சொன்னால் இந்த ஸ்டூடியோவில் ஒலிப்பதிவு செய்து கொள்வார்கள். இந்த ஒலியைப் பதிவுசெய்த 'ஸெலூலாயிட்' கார்டில் ஒட்டப்படுமாம். ஒவ்வொரு ரஷ்யப்படையிடமும் ஒரு கிராமபோன் அனுப்பப்படுகிறது. அங்கு அக் கார்டுகள் போய்ச்சேரும். ஸோல்ஜர்கள் கார்டுகளை கிராமபோனில் ரிகார்டுகளைப் போல் வைத்து விஷயத்தைத் தெரிந்து கொள்கிறார்களாம்! விக்ஞானவளர்ச்சியில் இன்னும் எத்தனை அதிசயங்களையெல்லாம் நாம் பார்க்கப்போகிறோமோ தெரியாது!

நிபுணன் யார்?

பிரபல தலைவர் ஒருவரைப் பத்திரிகை நிருபர் பேட்டி கண்டு பேசும்போது "நிபுணன்" என்ற பதத்தைத தாங்கள் என்ன மாதிரி வியாக்யானம் செய்வீர்கள்? என்று கேட்டார்.

பிரமுகர்:—"சுலபமான விஷயத்தை ஒன்றும் புரியாமல் குட்டை குழப்புபவர்தான் நிபுணர்" என்று கருதப்படுகிறது.

ஸ்ரீமதி சுந்தரிதம்பி



சமீபத்தில் திருவனந்தபுரம் ஸ்ரீமதி சுந்தரிதம்பி காஞ்சிபுரத்தில் தக்க பக்கவாத்தியத்துடன் சங்கீதக் கச்சேரி நடத்தினர். சபையினர் ரஸித்தனர்.

வக்கீலின் சமத்து

மாஜிஸ்திரேட்:—ஏண்டா? நீ முன்னால் திருடன் என்று ஒப்புக்கொண்டாய்! இப்போது இல்லையென்றாயே?

திருடன்:—இல்லிங்க. என் வக்கீல் சொல்றதைக் கேட்டதிலிருந்து நான் திருடவே இல்லை என்று திட்டமாகத் தெரிஞ்சு போயிடுத்துங்க!

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப்பலன் மாதவாரி எழுத ரூ. 3. ஆரூடம் 5 கேள்விகளுக்கு பதில் ரூ. 1. வி. பி. அணா 5. ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை. ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி. S I

பயங்கொள்ளி

சிறு கதை

★

கோதை

தொழில் முறைக்கு லாயக்கில்லாத பையனை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்பது அவனுக்கு விளங்கவில்லை. அவன் அவ்வளவு பயங்கொள்ளியாக இருப்பான் என்று எண்ணவேயில்லை. சிறுவனைத் திட்டினான், அடித்தான். தன்னைத்தானே அலுத்துக் கொண்டான். என்ன செய்தும் பயனில்லை.

"வங்குலே கையே விட்டு நண்டு புடிச்சுத் திங்கிற சாதிப் பய மவன் இப்படி பயப்பட்டா ஆகுமா? நாளைக்கு இவன் எப்படிப் பொழைக்கப் போறான்னு கேக்கறேன். அவன் அப்பன் ஏட்டையா வேலே பாத்துச் சம்பாரிச்சு வைச்சுருக்கான்னு நெனவா?"

இவ்விதம் பக்கத்தில் இருப்பவர்களிடம் சாக்ஷி அடித்துப் பேசினான் அவன். ஆனால் மாரியோ குனிந்த தலையை நிமிரவில்லை. இடித்தபுளி மாதிரி பேசாமல் நின்றிருந்தான்.

முனியன் கூறியதில் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்தது. மாரி அதை மறுக்கமுடியாது. தன் நடத்தைக்குச் சமாதானமாக அவன் ஏதாவது கூறப்போனால் அங்கே இருந்தவர்களுள் யாரும் அதை ஒப்பமாட்டார்கள் என்பதை அவன் அறிவான். வார்த்தை மிஞ்சுமேயன்றி காரியத்தில்முடிவு ஒன்றும் ஏற்படாது.

முனியன் எங்கள் ஊர்ப் பாம்பாட்டி. அவனுக்கு எங்கள் ஊரில் ஆண் பெண் அடங்கலாகக் குழந்தை முதல் பெரியவர் வரை எல்லோரையும் தெரியும்.

ஊர்க்குழந்தைகளில் யாரும் அவனைக் கண்டு பயப்படமாட்டார்கள். அவனைத் தெருக்கோடியில் கண்டவுடனேயே அவ்வளவு குழந்தைகளும் அவனைச் சுற்றிக் கூடிவிடும். அவன் ஒவ்வொரு வீடாகப் பிச்சை வாங்கி வரும்போதும் அவனைச் சுற்றி அந்தக் கூட்டமும் போய்க்கொண்டிருக்கும்.

"கணக்குப் புள்ளே வீட்டுக் கொளந்தே. உள்ளே போய் அம்மாவைக் கேட்டு அரிசி வாங்கிவா" என்று எங்கள் வீட்டு வாசலில் வந்தவுடன் அவன் என்னைப் பார்த்துச் சொல்வான்.

"எங்கே, அந்தப் பாம்பைப் படம் எடுத்துக் கொஞ்சம் ஆடச்சொல்லு? அப்புறம்தான் அரிசி வாங்கி வருவேன்" என்று சொல்லிக்கொண்டே நான் அந்த இடத்தை விட்டு அசைய மாட்டேன். முனியன் பாம்பைக் கண்டு எங்களுக்குக் கொஞ்சமும் பயமில்லையே.

ஆனால் அந்தப் பாம்போ படம் எடுத்து ஆடவே ஆடாது. அவன் கூடைப்பெட்டியைத் திறந்து பாம்பைப் புறங்கையால் கிண்டுவேன். அது கிளம்பாது. மகுடி ஊதுவான். அப்போதும் அது சுருட்டித் தலையைப்போட்டு படுத்திருக்கும்.

சில சமயங்களில் அந்தப் பாம்பு அவனுடைய உபத்திரவம் பொறுக்காமல் தலையைத் தூக்கிக் கோபத்துடன் 'உஸ்' என்று சீறி விட்டு மறுபடியும் படுத்துவிடும். அந்தச் சப்தத்தைக் கேட்டவுடனே நாங்கள் ஒருவரை ஒருவரை தள்ளிக் கொண்டு பின்னடைவோம். ஆனால் மறுபடியும் பக்கத்தில் வந்து அவனை வளைத்துக் கொண்டு கூடி விடுவோம்.

"ஏண்டா, முனியா, பாம்பு ஆடமாட்டேன் என்கிறது?" என்று யாராவது கேட்டு விட்டால் போதும் "அதுக்குப் பசி. அதான் படுத்துக்கிட்டுது... தங்கமோல்லியோ. உள்ளாரப் போய் அரிசி வாங்கியா...நான் போய் கஞ்சி காச்சிக் குடிச்சுட்டுப் பாம்புக்கும் பால் வாங்கி ஊத்தணும்" என்றான்.

அவன் பாம்புக்குப் பாலா தினமும் வாங்கிக் கொடுக்கிறான்? அதை யார் கண்டார்கள்? எங்கள் அம்மா, "அதெல்லாம் சுத்தப் பொய்" என்றுதான் சொல்லுகிறாள். எப்படியானால் என்ன அவனுக்குத் தன் பாம்பின் மீது உயிர்தான். அது தானே அவனுடைய வயிற்றை வளர்க்கிறது. அது இல்லாவிட்டால் அவனுக்கு யார் பிச்சை போடுவார்கள்?

அவன் தினம் எங்கள் தெருவுக்கே வர மாட்டான். இன்றைக்குப் போன தெருவுக்கு நாளைக்கு வரமாட்டான் சுற்றுவட்டம் நாலைந்து மைல் தூரத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் அவன் போவான். அவன் முறை போட்டுத் திட்டம் வகுத்துக்கொண்டு தான் ஒவ்வோர் இடமாகச் சுற்றுவான்.

ஆயினும் அவன் எங்கே போய்ப் பிச்சை எடுத்தாலும் கஞ்சி காய்ச்சுவதற்கு எங்கள் ஊருக்கு வந்துவிடுவான். குளத்தங்கரைப் பக்கத்திலே தோப்பின் மூலையில் ஒரு சிறு குடிசை போட்டு அதிலே தான் அவன் மாரியுடன் தங்கி வந்தான்.

அவனுக்குப் பெண்டாட்டி கிடையாது. அதைப்பற்றி யாராவது கேட்டு விட்டால் போதும். அவன் கண்களில் நீர் துளித்து விடும். ஆனால் பழங்கதையைப்பற்றி யாரிடமும் கூற மாட்டான். மாரி கூட அதைப்பற்றிக் கேட்டதில்லை. அவனுக்கே உண்மை விவரம் தெரியாது.

மாரி அவனுடைய மகன் இல்லையென்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் யாருக்கும் உண்மை தெரியாது. யார் பிள்ளையாக இருந்தால் என்ன? முனியனே அவனை வளர்த்து வந்தான். அவனுடைய சொத்துக்கு-பிரமாதமாக ஒன்றுமில்லை. செல்லரித்த அந்த ஓலைக் குடிசை, பாம்புப்பெட்டி, எங்கள் வட்டாரத்தில் கிடைக்கும் பிச்சை இவைகளுக்கு-மாரி தான் வாரிசு.

முனியன் தகப்பனும் எங்கள் ஊரில் தான் இருந்தானும். அதனால் அது பரம்பரைச் சொத்து அதை அடையப் போகும் மாரியை அவன் திட்டி அடித்து வளர்ப்பதில் என்ன குற்றம்? அவன் தொழில் முறைக்குத் தன் மகனைத் தயாரிப்பதில் பையனை அடிப்பதற்கு முனியனுக்கு உரிமை கிடையாதா?

மாரியும் பாம்பைக் கண்டு பயப்படுகிறவன் அல்ல. சில சமயங்களில் அவனே பாம்புப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு எங்கள் வீடுகளுக்குப் பிச்சை வாங்க வந்திருக்கிறான். அவனுக்கெனத் தனியாக ஒரு சிறு பெட்டியும் அதிலே பாம்புக் குட்டியும் இருந்தன.

மாரி பகல் முழுதும் எங்கே வேண்டுமானாலும் சுற்றுவான். அஸ்தமித்து விட்டால் அவன் குடிசையை விட்டு வெளியே வர மாட்டான். இருட்டைக் கண்டால் அவனுக்கு பயம் போலும்.

முனியன் சில நாட்களில் சாயங்கால வேளைகளிலே கொஞ்சம் 'தண்ணீர்' போட்டு விட்டு வந்து விடுவான். அப்போது அந்தக் குடிசைப் பக்கம் ஒரே அமர்க்களமாகவே இருக்கும்.

முனியன் வைத்திருந்த பாம்பு ஒருநாள் இறந்து விட்டது. அவன் தொழிலை நடத்துவதற்கு வேறு பாம்பு ஒன்று பிடித்தாக வேண்டும். இல்லாவிட்டால் ஜீவனம் எப்படி நடக்கும்?

செத்துப் போன பாம்புக்காக முனியன் பகல் முழுதும் அழுது அழுது குப்புறப்படுத்துக் கிடந்தான். ஆயினும் என்ன பயன்?

புதிய பாம்பு ஒன்றைப் பிடிப்பதற்காகப் புறப்பட்டான் அவன். தனியாகக் கிளப்பவில்லை. மாரியையும் தன்னுடன் இழுத்துக் கொண்டு போனான். மாரிக்கோ அந்த இருட்டில் அவனுடன் கிளம்பக் கொஞ்சமும் இஷ்டமில்லை.

"ராத்திரிவேளேலே போயிக் கஷ்டப்படுவானே? விடியக் கறுக்கலே போனாப்போறது" என்று முனியனைப் பார்த்துச் சொல்லிப் பார்த்தான் அவன்.

ஆனால் முனியன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

"நீ நெனக்கறப்போ போனா பாம்பு 'என்னைப் புடிச்சுக் கோன்னு வந்து குந்திக்கும் போலிருக்கு. அதானே ஒன்னெனப்பு. எப்போ போனா ஜல்தியாப் புடிக்கலாம்னு தெரியாதே பேசறே. சீ, வா" என்று எரிந்து விழுந்தான் முனியன் மாரியைப் பார்த்து.

சிறுவன் வேறு என்ன செய்ய முடியும்? தன் தலைவிதியை நொந்து கொண்டே கிளம்பினான்: ஈசுவரன் விட்ட வழியாகிறது' என்றே முடிவு செய்து விட்டான் போலும்.

இரவு வேளையிலே காட்டில் பாம்பைத் தேடிப் பிடிப்பது சுலபமான காரியம் அன்று. முனியன் எங்கே எங்கேயோ அலைந்தான். புற்றுகளில் கிடக்கும் அவற்றைத் தட்டி எழுப்பி வெளியில் வரச் செய்து பிடிப்பதற்கு என்ன என்னவோ உபாயங்களைச் செய்து பார்த்தான்.

அன்று பகல் முழுதும் அவன் பட்டினி. அலைந்திருந்து அவன் உடல் வாடி விட்டது. உள்ளம் சோர்ந்தது. கடைசியில் விடிய ஏழெட்டு நாழிகைப் பொழுதிருக்கும் போது ஒரு பாம்பைக் கண்டு பிடித்து விட்டான். அது கருநாகம். சந்தோஷமிகுதியினாலோ அவனுக்கு ஏற்பட்டிருந்த தளர்ச்சியாலோ அவன் கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன.

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 27?, சுக்ரவார் பேட்டை

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price, Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA.

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2" அகலமும், அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ.	8	12	0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள் ஜதை ரூ.	3	2	0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$க்கு உட்பட்டது ஜதை ரூ.	2	8	0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணா 8.

எமது கேட்லாக் இனம்.

டி. சி. நாகலிங்கப்பா & கோ.,
280, வால்டாக்ஸ் ரோடு :: பார்க் டவுன் :: மதராஸ்.

ஜப்பானிய விமானத்தை வீழ்த்தியவர்

கல்கத்தா பகுதியில் குண்டு வீச வந்த ஜப்பானிய விமானங்களில் முதலாவதாக ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்திய ஜே ஏ. ஓநீல்.

நெஞ்சில் உரம் இருந்ததோ இல்லையோ கையில் திடம் இல்லை.

முனியன் பிடி தவறி விட்டது. அவ்வளவு தான் அந்தக் கருநாகம். சீறிக்கொண்டு திரும்பித் தன் படத்தால் அவனை அடித்தது.

வேதனை பொறுக்க முடியவில்லை. பல்பட்ட இடத்தினின்றும் ரத்தம் கசிய ஆரம்பித்து விட்டது. முனியன் பயந்து விட்டான்.

இதுவரையில் அவன் இவ்விதம் அகப்பட்டுக்கொண்டதில்லை. அவனுக்குத் தன் நிதானத்தில் அபாரமான நம்பிக்கை. அதனால் விஷத்துக்கு மாற்றாகக் கொடுக்கக்கூடிய மருந்து வேர் ஒன்றையும் அவன் தன்னுடன் கொண்டுவரவில்லை.

அடிபட்ட இடத்திலிருந்து அவன் குடிசைக்கு ஒரு மைல் தூரம் இருக்கும். அவனைக் காப்பாற்றக்கூடிய வேர் அந்த குடிசையிலேதான் இருந்தது. ஆனால் எப்படி அந்த வேரை அடைவது?

முனியனே அந்த இடத்தை விட்டு நகரமுடியாது உடலை அசைத்து ரத்த வோட்டத்தைப் பெருக்கித்தன் சக்தியையும் குறைத்துக் கொள்வது தன் உயிருக்கே ஆபத்தாக முடியும் என்பதை அவன் அறிவான். மாரியை அனுப்பி அதனை எடுத்துவரச் செய்தால்?

மாரிதான் பயங்கொள்ளி ஆயிற்றே. இருட்டில், அதுவும், இந்தக்காட்சியைக்கண்ட பிறகு தனியே ஒருமைல் ஓடிப்போய்த் திரும்பிவர ஒத்துக்கொள்வானா? அதைப்பற்றி முனியன் எண்ணவேயில்லை.

"எலே இரண்டு எட்டிலே குடிசைக்கு ஓடி அந்த வேரேக் கொண்டாரணும், தெரியுமா?" என்று உத்தரவிட்டான் முனியன்.

பாம்பாட்டியின் குடிசையில் எத்தனையோ வேர்கள் இருக்கும். கருநாகத்தின் விஷத்திற்கு மாற்றான அந்த வேரை எப்படியறிவது?

"கதவு மூலேலே எரவானத்திலே ஒரு துணி முடிச்சிலே இரண்டு வேருவச்சருக்கேன். அதிலே ஒண்ணு வெள்ளேயாயிருக்கும். இன்னொண்ணு மஞ்சள். அந்த மஞ்ச வேரேக் கொண்டோடியா. வெள்ளே வேரெக் கொண்டாராதே. அது கொடிய விஷம். அதைத் தின்னா உடனே செத்துப்போடுவா. மஞ்ச வேரே எடுத்துக்கிட்டு ஓடியா. ஒரே ஓட்டம்" என்று வற்புறுத்திக் கூறினான் முனியன்.

மாரி சிறிதும் தயங்கவில்லை. அவன் சிறிதும் பயப்படாமல் நேரே குடிசைக்கு வந்தான். அந்த இரண்டு வேர்களையும் எடுத்து விளக்கு வெளிச்சத்திலே திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

அவன் திரும்பி வருவதற்குள் முனியனுக்கு ஒரு மூர்ச்சை போட்டுவிட்டது. சுவாசமும் கொஞ்சம் கஷ்டத்துடனே தான் வந்தது. எப்படியோ மாரி வேரைக் கொண்டு கொடுத்து அவனைக் காப்பாற்றிவிட்டான்.

மறு நாள் முழுதும் முனியன் தன் குடிசையில்தான் கிடந்தான். முதல் நாள் இரவு அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அடங்கவில்லை. ஓர் இரவும் ஒரு பகலும் ஆயின அவன் பழைய படி ஆவதற்கு.

"மாரி, இன்னமே நான் உன்னைப்பயந்தாங்கொள்ளியென்று சொல்லமாட்டேன். அன்னிக்கு ராத்திரி எவ்வளவு துணிச்சலோடே நீ இங்கே வந்து வேரைக் கொண்ணாந்தே. நீ அப்பிடி வந்திருக்காட்டி நான் இப்போ பொழைச்சிருப்பேனா?"

இவ்விதம் அன்பு ததும்பும் குரலில் தன் மகனைப் பார்த்துக் கூறினான் முனியன். அதுகாறும் தன்னைக் கேவலமாக மதித்து நடத்தி வந்த தந்தையே இப்படிக் கூறியது சிறியவன் உள்ளத்தில் ஒரு வேகத்தைக் கொடுத்தது. முனியனை அவன் என்றைக்கும் வெறுத்ததில்லை யாயினும் அவனிடம் ஒருநாளும் ஆசைகொண்டதில்லை. ஏதோ காலத்தைத் தள்ளி வந்தான். ஆனால் இன்றைக்கு அது மாறி அவன் தன் தந்தையைக் கண் குளிரப் பார்த்தான். பாசம் மிகுந்தது.

"இல்லே, 'நயினா நெசத்தே இப்போ சொல்ரேன். நான் ஒரு நாளும் பயந்தாங்கொள்ளியில்லே. ஆனா எனக்கு மாலைக் கண்ணு. ராத்திரி வேளையிலே அதான் நான் அதிகமா வெளிக் கிளம்பறதில்லே.

தனக்கு ஏற்பட்டிருந்த இயற்கைக் குறைவை அவன் வெளிப்படுத்தி விட்டான்.

மாரிக்கு மாலைக் கண் தான். இரவு வேளைகளில் நிறபேதத்தை அவனால் அறிய முடியாது. அப்படியானால் அவன் அன்றிரவு வெள்ளைவேர், மஞ்சள்வேர் ஆகியவற்றை எப்படிப் பிரித்து கொடிய விஷமான வெள்ளை வேரை நீக்கி மஞ்சள் வேரைக் கொணர்ந்தான்? அது பெரிய புதிர் இல்லை.

மாரி தனக்குள் நிச்சயம் செய்து கொண்டான். தன் தந்தையைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே பலியிடவேண்டுமானாலும் தயாராக இருந்தான்.

அந்த இரண்டு வேர்களிலும் அவனுக்கு வேறுபாடு தெரியவில்லை. அவன் அந்த வகையில் குருடனே. வேறு என்ன செய்ய முடியும்? தன்னையே பரிசைஷ செய்து பார்க்க முடிவு செய்தான்.

கைக்கு ஒன்றாக அந்த இரண்டு வேர்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். நடந்து செல்லும் போதே வலதுகை வேரைப் பல்லில் வைத்துக் கடித்து ஒரு சிறு துண்டை மென்று விழுங்கினான்.

அது வெள்ளை வேராக இருக்குமானால், கொடிய விஷமாதலால் அவன் முனியனை அடைவதற்குள் அதன் சேஷ்டையைக் காண்பிக்க ஆரம்பித்து விடும். அப்போது அவனுக்கு அது தெரிந்துவிடும். தந்தைக்கு இடது கையிலிருந்த மஞ்சள் வேரைக் கொடுத்து விடலாம்.

அன்றி, அது மஞ்சள் நிற வேராக இருந்து விடுமாகில் அவனை ஒன்றுஞ் செய்யாது.

எவ்விதமாயினும் வழி நடந்து போவதற்குள் இரண்டுள் ஒன்று நிச்சயமாகி விடும். அதையே செய்தான்.

தெய்வம் மாரிக்கு அனுகூலமாக இருந்தது. நல்ல வேளையாக அவன் கடித்த வேர் மஞ்சள் நிறமானது அதனால் அது அவனை ஒன்றும் செய்ய வில்லை. அவன் தப்பியதுடன் தந்தையும் பிழைத்தான். வேறுவிதமாக இருந்திருந்தால்?...

மாரி பயங் கொள்ளியா?

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது.

	ரூ.	அ.
வைதேகி	2	8
பத்மசுந்தரன்	2	8
சாருலோசனா	2	8
காதலின் கனி	2	8
ராதாமணி	2	8

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவ ரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் டீ நறுமணமுள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக்கோ சூரிய வெப்பத்தால் நன்றாக பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன. பிறகு நன்றாக வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய கர்பிக்கான் தூளாக செய்யப்படுகிறது.



நரஸூஸ்

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.

மற்ற விவரங்களுக்கு மேல்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பேனி.
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

டீ, காபி

MNK-9.

கலாமோஹினி

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

[இரவு மணி 9. மோகனுவும் சுசீலையும் உட்கார்ந்திருக்கின்றனர். அருகாமையிலுள்ள சிவன் கோவிலிலிருந்து மேளச் சப்தம் கேட்கிறது.]

மோகனு:—ஆ ஹா! கானத்திற்குத் தான் என்ன அற்புதமான சக்தி! எத்தனை விதமான எண்ணங்கள் மனதில் உதிக்கின்றன. இன்ப உணர்ச்சிகளை நடந்த, நடக்கப்போகிற, எல்லா உணர்ச்சிகளையும் நமது மனத்திடை கொணர்ந்து விடுகிறது. ஸகீ சுசீலா! சங்கீதம் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பை யளிக்கிறது.

சுசீலே:—(சிறிது அசிரத்தையோடு) மோகனு! எனக்கு உனது கலைப்பைத்தியம் இப்போ ரஸிக்காது.

மோகனு:—சுசீலா! உன் கேலியை விடு. சங்கீதம் கால வெள்ளத்தினுல் ஏற்பட்ட சேதத்தை மாற்றி மனதில் உற்சாக மூட்டும் ஓர் கலை யென்பதையாவது நீ ஒப்புக் கொள்ளவேண்டும். அதோ கோவிலில் கல்யாணி ராகம் வாசிக்கிறுன் நாயனக்காரன், அது நம் மனதில் எத்தனையோவித மாயக்கனவுகளை எழுப்புகிறது பார்த்தாயா?

சுசீலே:—சரி போதும். "தான் கெட்டது போதாதென்று சந்திர புஷ்கரணியையும் கெடுத்ததாம்" என்பது போல் உனக்குத் தூக்கம் வராவிட்டால்...என்னையும் கெடுத்தால்......

மோகனு:—சுசி இப்போது மாதர்கள் நாகரீகம் எனக் கருதுவது எது என்ருல் எந்தக்கலையையும் பரிகசிப்பது. எதற்கும் விமரிசனம் செய்வது, ஸாத்யமில்லாததையும், அறிய முடியாததையும் கூட அறிந்தது போல் பேசுவது.

சுசீலே:—சரி; நீ தூங்கமாட்டாய். நான்...கண்ணை க்கிறுக்குகிறது. நீ உன் மானஸீக யாத்திரைகளைச் செய்து முடி. இது இருக்கட்டும். நாளை பத்திரிகைக்கு ஏதோ விஷயம் எழுதப்போவதாகச் சொன்னுயே? அவைகளை யாவது மனதில் நன்கு உருவகப்படுத்திக்கொள். நாளை மாலைத் தபாலுக்காவது அனுப்பவேண்டும்.

மோகனு:—சரி. பேச்சுப் போதும். "சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய் சும்மாவிருக்க வருவாய்."

சுசீ:—கனவு கண்டால் மட்டும் போதுமா காரியம் வேண்டாமா? பணமில்லாமல் கலையழகை மட்டும் வைத்து சுகமடைய முடியுமா?

மோகனு:—ஐயோ! நீ தொலைந்து போ! கனவை இன்பக் கனவைத் தடைசெய்யாதே! கனவு காண்கிருள்.

ஐயோ! சுசீலையைப் போகச் சொன்னேனே. ஆனல் எத்தனைபேர் இப்பொழுது என்னைத் துன்புறுத்த விரைந்து வருகின்றனர்? இந்தக் காரிருளில் வருவதற்கு எத்துணை தைரியம் வேண்டும்! அஞ்சா நெஞ்சுபடைத்த திருடரிலும் துணிந்தவர் இப்பெண்கள். ஐயோ! இவர்கள் தொல்லையினின்றும் எவ்வண்ணம் விடுபடுவேன்? ஒவ்வொருத்தியும் ஒரொரு கதை விடுகிருள். மனிதன் கலாவுணர்ச்சியைக் கெடுப்பதற்கு எத்தனை பாவிகள் காத்திருக்கிருர்கள். அந்தப் பெண்கள் நகைக்கிருர்கள்! எனக்கு நெருப்பா யெரிகிறது." என்னடி ரொம்ப! என் மாதிரி நிலைமை ஏற்பட்டால் உங்களுக்குத் தெரியும். சென்னையில் அபாயச் சங்கு ஒலித்ததும்-அதைக் கேட்டு அடுத்த வீட்டு அம்மாமி-புதுப் புடவையைப் பிரித்து உடுத்திக் கொண்டு, குழியில் வந்து பதுங்கினதும். ரங்கூனில் அத்தங்காள் பெண் குழந்தை குட்டிகளோடு-பர்மா-ரோட் வழியே நடந்து வரும்போது யானையும், கரடியும் ஓடி வந்ததாம, இவர்கள் கூடப் பயப்படாமலிருக்கும்போது அவள் புருஷன் பயந்து மறுபடியும் திரும்ப பர்மாவுக்குள் ஓடினதும் அவர்கள் கொணர்ந்த ரொட்டியை அந்த மிருகங்கள் தின்று விட்டு போனதால் கூட வந்த செட்டியாருக்கு நோவு கண்டதும், பதிவிரதா தர்மத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லி வரும் ஒரு பத்தினி பத்துபதினைந்து புருஷர்களுடன் திரிவதும், 'என் விதி இப்படியாச்சே என்று துக்கச் சிரிப்புச் சிரிக்கும் பெண்ணை அவள் புருஷன், என்ன சந்தோஷம், என்று அதட்டுவதும், 'ஐயோ ஜப்பான் வந்து நம்மை விரட்டினுனே! தமிழ் பேச்சையே ஸ்மரிக்காமல் சுத்தமான ஆங்கிலப் பேச்சு 'ஆங்கில உடை, ஆங்கில மனேபாவம் இவற்ருேடிருந்தோமே! தமிழ் நாட்டிற்குப் போகும்படி ஏற்பட்டதே!;' என்று கலங்கும் நாகரிகச் சிறுமியின் பரிதாபமும், இவ்வளவு போதாதென்று ஸங்கீத சர்ச்சைகளும், தமிழிசை இயக்கத் தகராறுகளும் உணவுப் பஞ்சமும் பொருள்களின் பஞ்சமும், விளக்கணைப்பு விதியும்-என்னை எனது கலாநிதியைக் காண வொட்டாமல் செய்கின்றனவே! அடி பெண்களே, நிறுத்துங்கள் உங்கள் வம்புகளை! முன்னுளில் நீங்கள் கர்னுடகம் என்று பழிக்கும் நாளில் பெண்கள் மேன்மையுற்றிருந்தனர். ஒவ்வொருவரும் தரும சாஸ்திர விதி தவராமல் வாழ்ந்து வந்தனர். இல்லறத்தை நல்லறமாக்குவதற்குப் பர்த்தாவுக்கு ஏற்ற சதியாக இருந்தனர். இப்போதோ அரைகுறை ஆங்கிலம் படித்துவிட்டு பெரிய மேதாவிகள் என்று ஒவ்வொருவரும் தங்களை நினைக்கிருர்கள்.

"நாவல் படிப்பதின்றி நன்னுலாராய்ச்சி செய்ய-ஆவல் கொள்வாரில்லையே? இந்தியாவில் பெண்கள் நிலைமை ஐயோ! அந்தப் பெண்கள் எல்லாரும் திடீரென்று எங்கு சென்று மறைந்தனர்!"

அருகிலுள்ள மேஜையிலிருந்து சிரிப்புக் குரல் கேட்டது. திடுக்கிட்டெழுந்தாள் மோகனு

கலாநிதி:—மோகனு! நேற்று லேடீஸ் கிளப்பில் பேச்சு பலம்போலிருக்கிறது. நீ கனவில் பிதற்றியதை எழுதிக்கொண்டிருந்தேன் இத்தனை நேரம் நான் எத்தனையோ இடையூறுகளைக் கடந்து இங்கு வந்தேன். நீயும் அது போலவே துயருற்ருயென்று உன் கனவிலிருந்து தெளிவாயிற்று. இன்று தான் நம் விவாஹத்திற்கு என் பெற்ருேர் சம்மதித்தனர். நீ உன்னிஷ்டப்படிக் கலியாணச்சிபண்ணு. நான் என் இஷ்டப்படி உன் ரூபஸௌந்தரியத்தைப்பற்றி ஆராய்ச்சி பண்ணுகிறேன்" என்ருள்.

சுசீலே:—நான் இதைப் பத்திரிகைக்கு அனுப்புகிறேன். என்று மேஜையிலிருந்து குறிப்பை எடுத்தாள்.

வார்ப்பட இரும்பு

தண்ணீர் வளர்ச்சிக்கும்

தொட்டிகள்



இந்தியாவில் தயாரிக்கப்படும் மூன்று வித தண்ணீர் தொட்டிகளைப் படத்தில் காணலாம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறந்தவைகளுக்குச் சமமானவை.

"டைபூன்" "மான்ஸூன்", தொட்டிகளில் கொசு பூராது. ஜே.ஸி. எஸ். டபிள்யூ. விதிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டவை.

"யானை" மார்க் தொட்டிகள் மலிவானதாயும் திறமையுள்ளதாயும் தேவையென விரும்புவோர்க்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்டவை.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்
12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

குண்டலகேசி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சயந்திக்குள்ள அளவற்ற பக்தியை உணர்ந்தே அவன் அவ்வாறு கூறினுன். ஆனுலும் தூய உள்ளம் படைத்த அவள் ஸத்துகன் கூறிய நீதிமொழிகளைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டாள். ஸத்துகனிடம் கொண்ட ஐயத்தையும் மறந்தாள். அவள் உள்ளம் மகிழ்ந்ததைக் கண்டு ஸத்துகனும் மகிழ்ச்சி கொண்டான். இருவரும் மகிழ்ந்திருக்கும் அச்சமயத்தில் சயந்தியின் சேடி, அங்கு வந்து வணங்கி நின்ருள். அவளை நிமிர்ந்து பார்த்தாள் சயந்தி.

சேடி பிரவேசம்

"சயந்தி, யாரோ ஒருவர் வந்திருக்கிருர். சேனைத் தலைவர் என்று சொல்லுகிருர்" என்ருள் சேடி. கோவைப் பழம் போல் சிவந்தன சயந்தியின் கண்கள்.

"நாகவல்லி, யாரைப் பார்க்க அவர் வந்திருக்கிருர்? வந்த காரியம் என்ன என்று கேட்டு வா" என்று கோபத்துடன் கூறினுள் சயந்தி.

"யார், சேனைத் தலைவர்.... அவருக்கு இங்கு என்ன காரியம்?" என்று கூறிக்கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தான் ஸத்துகன்.

மாளிகையின் வாயிலில் சேனைத் தலைவன் நின்றுகொண்டிருந்தான். மாளிகையின் முன்புறத்தில் குதிரை ஒன்று கட்டப்பெற்றிருந்தது. அதை முதலிலேயே அவன் கவனிக்கவில்லை. அந்தக் குதிரையின் அடையாளத்தால் ஸத்துகன் அங்கு இருப்பதை உணர்ந்து கொண்டான். உடனே அவன் உள்ளம் சிறிது பரபரப்புற்றது. மாளிகையை மேலும் கீழும் பார்த்த வண்ணம் ஏதோ ஆலோசித்தான். அதற்குள்ளாக மேல் மாடத்திலிருந்து சயந்தியின் சேடி—நாகவல்லி வந்துவிட்டாள்.

"வந்த காரியம் என்ன? என்று, சயந்தி கேட்டு வரச் சொன்னுள்; ஸத்துகரும் இங்கு இருக்கிருர்" என்ருள் நாகவல்லி.

"அப்படியா, நல்லது. ஸத்துகரைத் தேடித்தான் வந்தேன்" என்ருன். நாகவல்லி மேல் மாடம் சென்ருள். சேனைத் தலைவன் கூறியதை ஸத்துகனிடம் சொன்னுள். அதைக் கேட்டதும் ஸத்துகனுக்குக் கோபம் மிகுதியாயிற்று. கட்டிலில் இருந்து நிலைம் அதிரக் கீழே குதித்தான். வெகு வேகமாக மேல் மாடத்திலிருந்து கீழிறங்கிலானுன். அதைக் கண்ட சயந்தி என்ன நேரிடுமோ என்ற அச்சத்துடன் அவனேடு சென்ருள். ஸத்துகன் முன்புறத்தை அடைந்து நின்ருன். ஸத்துகனைக் கண்டதும் குதிரையிலிருந்து குதித்தான் சேனைத் தலைவன்.

"இளந்தத்தனு? என்னைப் பார்க்க இங்கு வருவானேன்?"

"ஸத்துகா, உன் உன்னுடைய மாளிகையில் நீ இல்லை என்பது தெரிந்தது."

"இங்கு இருப்பேன் என்று யார் சொன்னுர்கள்?"

"பிறர் சொல்லவேண்டுமா? அது யான் அறிந்ததே."

"இனி அந்த வழக்கம் வேண்டாம். அதைச் சொல்லவே வந்தேன். நீ வந்த காரியம் என்ன?"

"சுமார் என்ற இடத்தில் நேற்றும், சில தினங்களுக்கு முன்பும் களவுகள் நடந்திருக்கின்றன. தங்கள் ஆட்கள் அதைச் செய்திருக்கிருர்கள் என்று தெரிகிறது."

"ஆட்கள் பிடிபட்டிருக்கிருர்களா?"

"இல்லை. அதைச் சொல்லிப் போகத்தான் வந்தேன்."

இனி இங்கு வராதே!

"எனக்கு ஒன்றும் தெரியாது. நகரில் எத்தனையோ களவுகள் நடக்கின்றன. அதற்கெல்லாம் நான் பொறுப்பாளியா? என் ஆட்கள் அதைச் செய்யவில்லை. களவை நேர்முகமாகக் கண்டு பிடித்துக்கொள். எக்காரணத்தைக் கொண்டும் இனி இங்கு வருவதைவிட்டு விடு" என்ருன் ஸத்துகன். படபட வென்று கோபமுடன் ஸத்துகன் கூறும் வார்த்தைகளைக் கேட்டு சேனைத் தலைவன்—இளந்தத்தன் அஞ்சினுன். உடனே மறுமொழி கூருமல் குதிரை மீது ஏறி உட்கார்ந்து மிக வேகமாகச் சென்று விட்டான். அவன் உருவம் மறையும் வரையில் கோபமுடன் அங்கேயே நின்ருன் ஸத்துகன். கணிகையர் வீதியை தாண்டிவிட்டது இளந்தத்தனின் குதிரை. ஸத்துகன் புன்னகையோடு சயந்தியை அழைத்துக் கொண்டு மேல்மாடம் சென்ருன். இளந்தத்தனின் தடுமாற்றத்தைப்பற்றி சயந்தியிடம் ஏளனமாகக் கூறிக் கொண்டிருந்தான் ஸத்துகன். சோழராஜனின் சேனைத் தலைவன் இளந்தத்தன். அவனுக்கு இருபத்தைந்து பிராயம் இருக்கும். ஸத்துகனுக்கு இளமை தொடங்கி நண்பனுக இருந்தவன். ஸத்துகனைப் பற்றி அவன் நன்கு அறிந்தவன். ஸத்துகனைப் பற்றி பிறருக்குத் தெரியாத சில உண்மைகள் அவனுக்குத் தெரியும். அவ்விருவருடைய நட்பும் நிலைத்து நிற்கவில்லை. சயந்தியின் காரணமாகவும் வேறு சில காரணங்களாலும் இருவருடைய நட்பும் குலைந்தது. சயந்தியை ஸத்துகன் காதலித்த அன்று முதல் அவனுக்கும் இளந்தத்தனுக்கும் தீராப்பகை ஏற்பட்டு விட்டது. சயந்தியிடம் தீராக் காதல் கொண்டிருந்தான் இளந்தத்தன். எவ்வாறேனும் அவளைத் தன் வயமாக்க வேண்டும் என்று எண்ணியிருந்தான் அதற்குச்சமயம் வாய்க்கவில்லை. பகலில் பெரும்பாலும் சயந்தியின் மாளிகையில் ஸத்துகன் இருப்பதில்லை என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். அதனுல் அன்று சயந்தியின் மாளிகைக்கு அவன் வந்தான். எதிர்பாராத விதமாய் ஸத்துகன் வந்திருப்பதை அறிந்துகொண்டான். உடனே, தக்கபடி நடந்துகொண்டான். இளந்தத்தன், அங்கு வந்ததற்கு வேறு காரணம் கூறியதில் உண்மைஇல்லாமல் இல்லை. சுமார் என்ற இடத்தில் களவு நடந்தது உண்மையே. அக்களவுக்கும் ஸத்துகனுக்கும் தொடர்பு இருந்தது என்பதும் உண்மை. அதுபோன்ற களவுகள் அந்நகரில் நீண்ட நாட்களாக நடந்து வருகின்றன. அவற்றைக் கண்டு பிடிக்க முடியாததற்குப் பல காரணங்கள் இருந்தன. அது விஷயமாய், இளந்தத்தன் செய்யும் முயற்சிகள் வீணுகி வந்தன.

களவு காரணமல்ல

ஆனுல் அன்று அவன் வந்ததற்கு அந்தக் களவு காரணம் அல்ல. சயந்தியைக் காண்பதற்கே வந்தான். வந்தும் என்? ஸத்துகனைக் கண்டதும் 'தலை தப்பியது' என்று எண்ணி மீண்டும் சென்ருன். இளந்தத்தன் அங்கு எதற்காக வந்தான் என்பதை, ஸத்துகனும் சயந்தியும் உணர்ந்து கொண்டனர். ஸத்துகன் இல்லாதபோது, சில முறை, அங்கு அவன் வந்து சயந்தியைக் கண்டு பேச முடியாமல் சென்றிருக்கிருன். அதைப்பற்றி ஸத்துகனுக்குச் சிறிதும் தெரியாது. சயந்தி அவைகளைக் கூருமல் இருந்ததற்குக் காரணம், இளந்தத்தனுல் ஸத்துகனுக்குத் துன்பம் நேருமோ என்று தான். ஆனுல் அன்றைய தினம், பழைய விவரங்களை ஸத்துகனிடம் கூறி விட்டாள் சயந்தி. இளந்தத்தன் மீது அவனுக்குக் கோபம் மிகுதியாயிற்று.

"இங்கு இனி அவன் வந்தால் வந்த அன்றே என்னிடம் சொல்லிவிடு. அவனை, என் வாளுக்கு விருந்து செய்கிறேன்" என்று கூறினுன். மாலைக் காலம் சமீபித்தது. ஸத்துகன் உள்ளமும் வேறு எங்கோ உலாவியது. சிறிது நேரம், அவளோடு இன்பமாகப் பேசியிருந்தான். "நாழிகை ஆகிவிட்டது: சென்று விட்டு இரவில் வருகிறேன்" என்று எழுந்திருந்தான் "விரைவில் வந்து விடுங்கள்" என்ருள் சயந்தி குனிந்து கொண்டே.

மேல் மாடத்திலிருந்து விரைவாக இறங்கினுன். குதிரையைத் திருப்பி அதில் ஏறி உட்கார்ந்தான். மாளிகையின் வாயில் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள். நாகவல்லி. மேல் மாடத்தில் இருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள் சயந்தி. ஸத்துகன் மிக வேகமாகக் குதிரையைச் செலுத்திச் சென்ருன். பத்திரையைப் பார்க்க, அவன் செல்வது, சயந்திக்கு எவ்வாறு தெரியும்?

(தொடரும்.)

வி.எச்.ஆர் பெருங்காயம்

அழகாகவும் அடர்த்தியாகவும் புஷ்ட்டியாகவும் கூந்தலை வளர்விக்கும்.

விலை 12 அணா

விக்டோரியா டிபோ. மைலாப்பூர், மதராஸ்.

ஷாப்புகளில் கிடைக்கும்.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில, சீககாய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T. மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஃஸ் ஆவணிமீ

★

விசாகம்

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாத ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆவணிமீ 1உ

		சனி	குரு
கேது	11உ—கன்னி-புதன் 21உ—சிம்ம-புதன் 22உ—கன்னி-குஜன்		சுக்கிரன்
			சூரியன் குஜன் புதன் ராகு

நமக்கு இம்மாதம் முன்னிரவில் தெரியும் ஆகாயக் காக்ஷிகளில் தனுசுக் கூட்டம், அழகில் சிறந்த கூட்டங்களில் ஒன்று. அதன் முக்கிய நக்ஷத்திரங்கள் பிரகாசமானவை. அதனிடையே ஆகாய கங்கையின் பிரவாகம் ஊடுருவிச் செல்கின்றது. ஆகாய கங்கையின் (பால் வழி) ஒளி இப்பாகத்தில் தான் அதிப் பிரகாசமானது. இது பிளவுபட்டு, சிறு சிறு துண்டங்களாகக் காணப்படும். வெண்மையான, பிரகாசமான பஞ்சு மூட்டைகள் இங்கு அடுக்கியிருப்பதுபோல் தோன்றும்.

தனுசுக் கூட்டம்

தனுசுக் கூட்டத்தைப் பொதுவில் இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பாகத்திலும் 4 பிரகாசமான நக்ஷத்திரங்கள் ஒரு நீண்ட சதுரத்தைச் சித்தரிக்கின்றது. மேற்கேயுள்ள நீண்ட சதுரம் பால் வழியினிடையே அமைந்திருக்கின்றது. அரேபியர்கள் இவ்வொவ்வொரு பாகத்தையும் ஒரு நெருப்புக் கோழியாகக் கருதுகிறார்கள். ஒன்று ஆகாயத்தைக் கடக்கப் போவதாகவும், மற்றொன்று, கடந்துவிட்டு திரும்பி வருவதாகவும் அவர்கள் கொள்கை. புராதன ஆகாய மண்டலச் சித்திரங்களில், ஹிந்துக்கள் இக்கூட்டத்தை ஒரு குதிரையின் வடிவமாகக் காட்டியிருக்கின்றனர். பண்டைக் காலத்தில், ஜேஸன் எனும் கிரேக்க வீரன், தன் மாலுமிகளுடன் புறப்பட்டு 'பொன் தோல்' கொண்டு வர சமுத்திரம் கடந்து சென்றான். அப்பொழுது இக்கூட்டமே வழி காட்டியாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. பெர்ஷியா தேசத்தில் இக்கூட்டம் ஒரு வில் வீர அரசனின் உருவம் எனக் கொள்கின்றனர்.

ஹிந்துக்கள் கொள்கைப்படி இக்கூட்டத்தில், பூராடம், உத்திராடம் எனும் இரு நக்ஷத்திரங்களும் இருப்பதாகக் கொள்கை. இவ்விரண்டு "ஆஷாட" நக்ஷத்திரங்களும், நீரையும், தேவர்களையும், குருவாகக் கொண்டவை. ஒவ்வொன்றும் படுக்கையாகவும், யானையின் தந்தமாகவும் தனித்தனியே கொள்ளப்படுகின்றது,

இக்கூட்டத்தின் முக்கிய நக்ஷத்திரம் வில் வீரனின் கால் பாகத்தில் இருக்கிறது. நான்காம் தர ஒளியுள்ளது. இதற்கடுந்தாற் போல் ஒளியுள்ள நக்ஷத்திரம், ஒரு இரட்டை நக்ஷத்திரம். இது 1000 ஒளி-வருஷங்களுக்கப்பால் இருக்கிறது. இதன் மூன்றும் நக்ஷத்திரம் 81 ஒளி-வருஷத்திற்கப்பால் இருக்கிறது. இன்னும் பல பிரகாசமான நக்ஷத்திரங்கள் இக் கூட்டத்தில் இருக்கின்றது. மொத்தத்தில் தென் வானில் விருச்சிகத்திற்குக் கிழக்கே மிகவும் அழகாக இக் கூட்டம் விளங்குவதைக் காணலாம்.

கிரஹங்களின் நிலே

புதன்:—சென்றமாதக் கடைசி வாரத்தில் அழகிய சிம்மக் கூட்டத்திற்கு மாறிற்று. பிறகு இம்மாதம் 15-ம் தேதியன்று (30-8-42) புதன் கன்னிக்குச் செல்கிறது. கன்னியிலேயே முன்னும் பின்னுமாக இரண்டு மாதத்திற்குமேல் கழிக்கும், இம்மாதம் எல்லாம் சூரியனுக்குப் பிறகே புதன் அஸ்தமிக்கிறது. கடைசி தேதியன்று புதன் சூரியனிடமிருந்து வெகுதூரத்தில் (பார்வைக்கு) இருப்பதால் கடைசி வாரத்தில் புதனை சுலபமாக மேல் வானில் காண முடியும். 4-ம்தேதியன்று(19-8-42) குஜனருகிலும், 16-ம் தேதியன்று (31-8-42) நேப்டியூனருகிலும் புதனிருக்கும்,

சுக்கிரன்:— விடியற்காலேயில் சுக்கிரனை இம்மாதமும் காணலாம். இதன் அழகிய ஒளி கீழ் வானை அழகுபடுத்துகிறது. சென்றமாதக் கடைசியில் கடகத்திற்கு வந்த சுக்கிரன், இம்மாதம் 17-ம் தேதியன்று (1-9-42) சிம்மத்திற்கு மாறுகிறது. சிம்மக் கூட்டத்தின் அதிப்பிரகாச நக்ஷத்திரங்களினிடையே ஒரு திலகம்போல் சுக்கிரன் தோன்றும். ஆனால் நாள் செல்லச் செல்ல இது உதயமாகும் நேரம் சூரியோதயத்தை நெருங்குகிறது.

குஜன்:— சிம்மத்திலிருக்கும் குஜன், 23-ம் தேதியன்று (7-9-42) கன்னிக்கு மாறுகிறது.. இது சூரிய உதயத்திற்குப் பின்னேயே இம்மாத மெல்லாம் மறைகிறது. ஆனால் அடிவானத்திற்கு இது அருகிலிருக்கும் பொழுதுதான் சூரியன் மறைவதால், சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு வெகு நேரம் குஜன் வானில் இருப்பதில்லே.

குருவும், சனியும்:—கீழ் வானில் விடியற்காலேயில் காணப்படும். குரு, மிதுனத்திலும், சனி, ரிஷபத்திலும் இருக்கின்றன. சனி, விடியற்காலேயில் உச்சிக் கருகே காணப்படும். சுக்கிரனிற் கடுத்தாற்போல், குருவின் பிரகாசம் நம் கவனத்தைக் கவர்கின்றது,

உரானஸும், நெப்டியூனும்:- முறையே ரிஷபத்திலும், கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.

கிரஹணங்கள்

ஆகஸ்டு 26-ம் தேதி ஒரு பூரண சந்திரகிரஹணமும், செப்டம்பர் 10-ம் தேதியன்று ஒரு பார்சுவ சூரிய கிரஹணமும் சம்பவிக்கின்றன. ஆனால் இவ்விரு கிரஹணங்களும் நமக்குப் புலப்படாது.



சிறுவர் பகுதி

பறக்கும் குதிரை

★

(லக்ஷ்மி)

ரத்தினபுரி அரசன் ராமவர்மனுக்குக் குதிரைகள் என்றால் உயிர். அவனுடைய படையில் குதிரைப் படைதான் அதிகமிருக்கும். எல்லாம் நல்ல ஜாதிக் குதிரைகள். ராமவர்மனும் குதிரை சவாரியில் பேர் பெற்றவன்.

ஒரு நாள் மாதவன் என்னும் குதிரைக்காரன் அரச சபைக்கு மரக் குதிரையொன்றைக் கொண்டு வந்தான். அரசன் அக்குதிரையின் விசேஷங்களைச் சொல்லச் சொன்னான். மாதவனும் "அரசே! இக்குதிரையின் வலது காதினடியில் உள்ள ஆணியை அழுத்தினால் அது ஆகாயத்தில் பறக்கும்; இடது காதினடியில் உள்ள ஆணியை அழுத்தினால் குதிரை கீழேயிறங்கும்'' என்று சொன்னான். அரசனும் அக்குதிரையை விலேக்கு வாங்கிக்கொண்டான்.

மறுநாள் அக்குதிரையைப் பரீக்ஷித்துப் பார்க்க எண்ணி இளவரசனான ரவிவர்மன் அதன்மேல் ஏறி ஆணியை அழுத்தினான். குதிரை மேலே பறந்தது. ஒருவாரமாகியும் ரவிவர்மன் திரும்பி வராமற் போகவே இராமவர்மன் குதிரைக்கார மாதவன் மேல் சந்தேகமும், கோபமும் கொண்டு அவனைச் சிறையிலடைத்து விட்டான்.

குதிரையேறிச் சென்ற ரவிவர்மன் அன்றிரவில் வங்கதேசத்தில் ஒரு பெரியமாளிகையின் மேன் மாடத்தில் இறங்கினான். மெல்ல உள்ளே நுழைந்தான். அங்கு ஒரு விசித்திரமான தந்தக்கட்டிலொன்றில் ஓர் அழகிய பெண் படுத்திருந்தாள். ரவிவர்மனைக் கண்டதும் அவள் பயந்து கூச்சலிட முயன்றாள். ரவிவர்மன் கூச்சலிட வேண்டாமென்று அவளைக்கேட்டுக் கொண்டதுடன், தன் வரலாற்றையும் கூறினான். அப்பெண்ணும் அவனிடம் தான் வங்க ராஜகுமாரிச் சசிரேகை என்று கூறினாள். சசிரேகை ரவிவர்மன்மேல் ஆசைகொண்டாள். இரவில் வந்து தினமும் ரவிவர்மன் சசிரேகையுடன்பேசிக்கொண்டிருப்பான். கடைசியில் இருவரும் ஒருநாள்யாருக்கும் தெரியாமல் மரக்குதிரை மீதேறி ஓடிவிட்டனர்.

மறுநாள் வெகுதூரத்தில் உள்ள ஒரு காட்டில் இறங்கினர். ரவிவர்மன் சசிரேகையையும், குதிரையையும் விட்டு விட்டு ஆகாரம் தேடச் சென்றான். அப்பொழுது வேட்டைக்கு வந்த அவ்வூர் அரசன் ஜய்பாலன் சசிரேகையையும், மரக் குதிரையையும் தன் அரண்மனைக்குக் கவர்ந்து சென்றான். சசிரேகையைப் பலவிதமாய் ஹிம்சித்தும் அவள் அம்மரக்குதிரையைப் பற்றிய விவரத்தைச் சொல்ல மறுத்துவிட்டாள்.

ஜயபாலன் சசிரேகையை மணப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தான். ஏற்கனவே ரவிவர்மனை நினைந்து ஏங்கிக் கொண்டிருந்த சசிரேகை கல்யாண சமர்சாரத்தைக் கேட்டவுடன் திகில் கொண்டு கவலே மிகுதியால் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகி விட்டாள். ஜயபாலன் என்ன சிகிச்சை செய்தும் ஒன்றும் பிரயோஜனமில்லாமல் போயிற்று:

திற்க ஆகாரம் கொண்டு வந்த ரவிவர்மன் சசிரேகையையும், குதிரையையும் காணுமல் திடுக்கிட்டான். பைத்தியம் பிடித்தவன் போல எங்கெங்கோ தேடி அலேந்தான். கடைசியாக ஒரு நாள் அரண்மனைப் பக்கமாகப் போனபோது சசிரேகையைப் பற்றிய விஷயங்களையெல்லாம் விவரமாக அறிந்து கொண்டான். மனதில் ஏதோ தீர்மானம் செய்து கொண்டான.

எதிரியைத் தாக்கத் தயார்!

எதிரி நிலேயங்களைத் தாக்கத் தயாராகவிருக்கும் விமானத்தைப் பிரிட்டிஷ் 'மெக்கானிக்குகள் தயார்படுத்தி வைக்கிறார்கள்'

மறுநாள் ஜயப்பாலன் அரண்மனைக்கு புதிய மந்திரவாதி யொருவன் வந்தான். ஜயபாலன் நோயாளியிடம் அவனை அழைத்துச் சென்றான். மந்திரவாதியைக் கண்டவுடன் நோயாளி அடையாளம் கண்டு கொண்டாள். அவள் முகம் மலர்ந்தது. வாய்க்குள் ரவிவர்மா, ரவிவர்மா என்று முனகினாள். மந்திரவாதி (ரவிவர்மன்) அரசனைப் பார்த்து, "மஹாராஜா! நான் மந்திரம் போட்டுப் பார்த்தேன். தேவி வரம்கொடுத்தாள். தங்களிடம் உள்ள மரக் குதிரையை எரித்தாலன்றி வியாதி தீராது என்றும் தேவி கூறினாள். ஆகையால் நாளைய தினமே ஒரு தீக் குழி ஏற்படுத்துங்கள். யாருமறியாமல் குதிரையை எரித்து விடுவோம்'' என்றான். ஜயபாலனும் நோய் தீர்ந்தால் போதும் என்று சம்மதித்தான்.

மறு நாள் அரண்மனைக்குப் பின்புறம் ஒரு தீக்குழி ஏற்படுத்தப்பட்டது. அதில் தீ தகதக வென்று எரிந்து கொண்டிருந்தது. அவ்விடத்தில் ஜயபாலன் சசி ரேகை, குதிரை, மந்திரவாதி ஆகியோர் மட்டும் காணப்பட்டனர். மந்திரவாதி ஜயபாலனைத் தீக்குழியினருகில் நிற்க வைத்தான். அரசனுக்குப் பின்புறத்தில் சற்று தூரத்தில் குதிரையின் பக்கத்தில் சசிரேகை நின்றாள். மந்திரவாதி தேவியை ஸ்துதித்துக் கொண்டே தீக்குழியைச் சுற்றி வந்தான். எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்த அரசனை அவன் திடீரென்று தூக்கித் தீக்குழியில் தள்ளி விட்டான். உடனே, சசிரேகையுடன் குதிரையேறி பறந்து சென்றான்.

தன் புத்திரனைத் திரும்ப அடைந்த அரசன் ராமவர்மன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். மாதவனை விடுதலே செய்து அவனுக்கு வெகுமதியும் அளித்தான்.

தன் புதல்வியின் இருப்பிடத்தை அறிந்த வங்க அரசன் தன் பரிஜனங்களுடன் ரத்தினபுரிக்கு வந்து, சசிரேகையை ரவிவர்மனுக்கு மணமுடித்துக்கொடுத்தான். ரவிவர்மனுக்குப் பட்டாபிஷேகமும் நடந்தது.

ராமவர்மன், ராஜ்யத்தை ரவிவர்மன் ஒப்புக்கொண்ட பின் தன் காலத்தைத் தவம் செய்வதில் கழித்தான். சசிரேகையும், ரவிவர்மனும் பூவும் மணமும் போலச் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தனர்.

நவ நாகரீகம்

கண்ணாடி

★

"காசினி"

* * * 'சில காலம் போன பின் ஜடை நாங்கள் தரித்தோம். இப்போதே ஜடை நீங்கள் தரித்தீரோ புத்திராள், என்று ராமர் குசலவானைக் கேட்டாராம். அப்படித்தான் இருக்கு இப்போ இந்த நாளையக் குழந்தைகள்!' என்று என் அத்தை சொன்னாள்.

'எதுக்கு, யாரைப்பத்தி இப்படிச் சொல்லரேள்?' என்று மாலினி கேட்டாள்.

'எல்லாம் என் பெண்களைத் தான்!' என்றாள் லேடி சுந்திரா சாரி பெண் வேதம்.

''ஏன்? இப்போ அவாளுக்கு என்ன வந்துடுத்து?' என்றாள் ஆனரபிள் சிவன் மனைவி.

'இரண்டும் ஒரு மாசமாத் தலைவலி, கண்ணைக் கடுக்கிறது என்று சொல்லித் தொந்திரவு கொடுத்துதுகள்; கண்ணுக்குக் கண்ணாடி போட்டால்தான் சரியாகும் என்று டாக்டர் சொன்னான்! இதைத்தான் அத்தை சொல்லரார் என்றாள் வேதம்.

'ஆமாம்; உன் இரண்டாவது பெண்ணுக்கு 5 வயசு தானே ஆரது; மூக்குக் கண்ணாடியை உடைக்காமல் வைச்சுக்குமோ?' என்றாள் மோகினி.

'அந்த ரகளையை ஏன் கேட்கிறாய்? முதல் நாள் அதைக் கழட்டி வைச்சாள்; அப்புறம் மறதியாக அதன் மேல் உட்கார்ந்து விட்டாள். மறுபடியும் போடவேண்டி இருந்தது! இந்த நாளிலே விலைவாசி இருக்கிற ரீதியிலே இப்படிப்பெண்கள் தினம் ஒருகண்ணாடியாக உடைச்சால் என்னதான் பண்ணரது? இப்போவே பிடிச்சு இந்த அலங்காரம் ஏதுக்கு; கொஞ்ச நாள் போகட்டுமே என்றால், அதுக்குள்ளே என் குழந்தைகள் கண் கெட்டுவிடும் என்று இவள் வேறே சாதிக்கிறாள்; என்ன செய்யரது?' என்று வேதத்தின் மாமியார் அழாக் குறையாகச் சொன்னாள்.

'அதைத்தான் நானும் சொல்லரேன். சின்னக்குழந்தை ஏதாவது ஓடிவிழுந்து, கண்ணாடியை உடைச்சுக்கப் போரதேனு பயமாக இருக்கு!' என்றாள் என்னுடைய அத்தை.

''உடைச்சுக் கொண்டா ஏதோ காசோடு போகுமே? கண்ணாடி கண்ணைக் குத்தி வைக்கப் போரதேனு கவலையாக இருக்கு?' என்றாள் வேதத்தின் மாமியார்.

''அமெரிக்காவிலே ஒரு புது தினுசுக் கண்ணாடி கண்டு பிடிச்சிருக்காளாம். இதைக் கல்லை வைச்சு உடைச்சால்கூட உடையாதாம். உள்ளித்தோல் போல் மெல்லிசாக இருக்குமாம். கறுப்பு; கறு நீலம் என்று இஷ்டமான நிறத்திலும் இருக்காம் இதைச் சட்டத்தில் போட்டு, முகத்தின் அழகைக் கெடுத்து மூக்கில் மாட்டிக் கொள்ள வேண்டாமாம். அப்படியே கண் மணி மேல் ரப்பைக்குள் பொருத்திக் கொள்ள வேண்டுமாம். இஷ்டமான போது நாமே கழட்டிக் கொள்ளலாமாம்!என்றாள் மாலினி.

'அப்படியா? அது இங்கே கிடைக்காதாக்கும்?' என்று வேதம் ஆவலுடன் கேட்டாள்.

'கண்ணாடி வெள்ளையாக இருந்தால் தானே கண் சரியாகத் தெரியும்? கறுப்பும், நீலமுமாக இருப்பானேன்?' என்றாள் என் அத்தை.

'வர்ணக் கண்ணாடி அணிவதால் கண் விழி அதே வர்ணமாக அழகாக இருக்கும்; பார்வைக்கு இவர்கள் இந்தக் கண்ணாடி போட்டிருப்பதே தெரியாது. இங்கே கிடைக்காது; ஒரு கண்ணாடி விலை ஆயிரம் ரூபாய்களுக்கு மேல் ஆகும் என்று தோன்றுகிறது. ஆனால், இன்னும் கொஞ்ச நாள் ஆனால், இதை அதிக விலை இல்லாமல் ஆயிரக் கணக்கில் தயாரிப்பார்கள். இப்போ மூக்குக்கண்ணாடியை அவசியத்துக்குனு போட்டுக் கொள்ளுகிறோம்; இப்படி வந்து விட்டால் கண் கறு நீலமாக அழகாக இருக்கணும் என்று அலங்காரத்துக்குப் போட்டுக் கொள்ள ஆரம்பிச்சு விடுவோம். நடுவிலே இந்த யுத்தம் ஒன்று வந்திரா விட்டால், எவ்வளவோ நல்லதாக இருந்திருக்கும்!' என்றாள் மாலினி.

'இதென்ன நிசமா? ஏதாவது நீலம் பிடிக்கிற கதையா?' என்றாள் என் அத்தை. இதைப் பற்றி தானும் எங்கேயோ வாசித்திருப்பதாக ஆனரபிள் சிவன் மனைவியும் சொன்ன பின் தான் இதில் கொஞ்சம் உண்மை இருக்கும் என்று என் அத்தை ஒப்புக் கொண்டாள். விஞ்ஞான சாஸ்திரிகள் எத்தனையோ விசித்திரமான விஷயங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்து, "வெகுதூரம்" என்ற சொல்லுக்கு ஒரு மதிப்பில்லாமல் செய்கிறார்கள். கூடவே விஷ வாயுவையும், 'பாம்' களையும் கண்டு பிடித்து, நாகரீகமே அழியுமோ என்று சந்தேகம் தோன்றும்படியான நிலையை ஏற்படும்படிச் செய்து விடுகிறார்கள். எல்லாம் யோசித்துப் பார்த்தால் மனதிற்கு ஒரு சாந்தி இல்லாமலே போய் விடுமோ என்று கூடச் சில வேளைகளில் தோன்றுகிறதில்லையா? மற்றைய விவரம் அடுத்த கடிதத்தில்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பொதுஜனங்களுக்கு வித்தியாசமின்றித் தக்கவாறு உணவுப் பொருள் கிடைக்க முறைப்படி வினியோகம் செய்வார்கள்.

பொது ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படவும் வழி தேடப்படும். வியாபார முறையில் மேற்சொன்ன ஏற்பாடுகள் சரிவர நடக்க வியாபார ஸ்தாபனங்களின் உதவியையும் பெறப்படும்.

* * * *

நாச வேலை: ராஜாஜி அபிப்ராயம்

காந்திஜி-ராஜப்பிரதிநிதி கடிதப் போக்குவரத்து பற்றி ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பின்வருமாறு தெரிவித்தார்:—

நாச வேலையைப் பற்றியும் பலாத்காரச் செயல்களைப் பற்றியும் காந்திஜி தெரிந்துகொண்டிருப்பது காந்திஜி-ராஜப்பிரதிநிதி கடிதப் போக்குவரத்திலிருந்து தெரிய வருகிறது. ராஜப்பிரதிநிதிக்கு எழுதிய கடிதங்களில் மேற்படி செயல்கள் பற்றிய கருத்தை மகாத்மா விளக்கமாகத் தெரிவித்திருக்கிறார். அத்தகைய நடவடிக்கைகளைக் காந்திஜி ஆமோதிக்க வில்லையென்பதை அப்பொழுதே இந்திய சர்க்கார் வெளியிடாதது ஆச்சரியமாக இருக்கிறது. முன்னமேயே அவ்விதம் செய்திருந்தால் நாச வேலையும் பலாத்கார வேலையும் பரவியிருப்பதைத் தடுத்திருக்கலாம். கடுமையான அடக்கு முறைக்கும் காரணமிருந்திருக்காது.

* * * *

பன்ஸாலி உபவாஸ நிறுத்தம்

காந்திஜிக்குக் கவலை ஏற்படாமலிருப்பதற்காக உபவாஸத்தை நிறுத்திவிடும்படி நண்பர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆசிரியர் பன்ஸாலி 13-ந்தேதி யன்று தமது உபவாஸத்தை நிறுத்திவிட்டார்.

* * *

"ஹிந்துஸ்தான் டைம்ஸ்"க்கு நிர்ப்பந்தம்

மகாத்மா உபவாச சம்பந்தமான செய்திகளைப் பிரசுரிப்பதில் ஹிந்துஸ்தான் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு விதித்துள்ள நிர்ப்பந்தங்களைப்பற்றி விவாதிக்க மத்திய சட்டசபையில் ஒரு அவசரப் பிரேரணை சர்தார் சாந்தசிங்கால் கொண்டு வரப்பட்டது. இது நிராகரிக்கப்பட்டு விட்டது.

* * * *

டாக்டர் கான்சாகிப் தாக்கப்பட்டார்

எல்லைப்புற மாஜிப் பிரதம மந்திரி டாக்டர் கான்சாகிப் பிஷாவருக்கு 14 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்குப் பிரசங்கம் செய்யச் சென்றார். அங்கு யாரோ சில விஷமிகள் அவரை அடித்துவிட்டார்கள். அவர் காயமடைந்தார். கூட்டம் ஆரம்பமாகுமுன் சிலர் அவரிடம் வந்து சொந்த விஷயங்களைப்பற்றி சில கேள்விகள் கேட்டார்களாம். அதற்கு உடனே பதிலளிக்கப்பட்டதெனினும் அது சம்பந்தமாகக் கலவரம் ஏற்பட்டது. அப்போது சில விஷமிகள் அவரை அடித்துவிட்டார்கள்.

பிரிட்டிஷ் விமானி பிரயாண சன்னத்தம்

ஜெர்மன் யுதத நிலையங்களைத் தவிடுபொடியாக்கப் புறப்படும் பிரிட்டிஷ் விமானி இவரிடம் பிராணவாயு முகமூடி, பாரசூட் முதலிய சகல சாதனங்களும் விமானததிலேயே இருககின்றன.

லண்டனில் நாஸி அட்டூழியம்



பிரபல ஸ்வீடன் பத்திரிகைக்காரர்கள் பிரிட்டனுக்குச் சென்ற போது லண்டனில எதிரி தாக்குதலால் நாசமடைந்த பகுதியைப் பார்வையிட்டனர்.

ஜெர்மன்-ரஷ்ய யுத்த வேகம்



ரஷ்யாவில் டான் போர்க்களத்தில் ஜெர்மனியருக்கும், ரஷ்யருக்கும் நடந்த கோர யுததத்தில் நாசமான ஒரு பகுதி.
— ஈ. என். பி.

எதிரி சப்மரீன் தொல்லையை ஒழிக்க



(மேல் படம்)

எதிரி சப்மரீன்களின் தொல்லையை ஒழிக்க அமெரிக்காவில் ஓர் புதிய கப்பலைத் தயாரித்திருக்கின்றனர். இதில் விமான என்ஜின் ஒனறு பொருத்தபபட்டுள்ளது. ஜலததின் மீது இது மணிக்கு 50 மைல் போகும். அண்டாயின் காஸ்டா என்பவர் இதைக கண்டுபிடித்தார். இது இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியாதாம.

லண்டன்—கில்டு ஹால்



அயல் நாட்டிலிருந்து லண்டன் வருவோருக்கு உபசாரங்கள் நடக்குமிடம் கில்டு ஹால். அமெரிக்கத் துருப்புகள் இங்கு விஜயம் செய்தன. அமெரிக்கக தூதர் மிஸ்டர் வினென்ட, மிஸ்டர் ஈடன் முதலியவர்கள் துருப்புகளை இங்கு வரவேற்றனர்.

அண்ணாமலை சர்வகலாசாலை ஸ்தாபகர்தினவிழா

சமீபத்தில் ஷை விழா ஸ்ரீமான் ரத்தினஸ்வாமி தலைமையில் கொண்டாடப்பட்டது. டாக்டர் ஏ. லட்சுமணஸ்வாமி முதலியார் ஸ்தாபகர்தினப் பிரசங்கத்தைச் செய்தார்.

(கீழ் படம்)

சேலம் ஸ்திரீகள் இலக்கிய சங்கம்

சென்ற மாதம் 30-ந்தேதியன்று சேலம் ஸ்திரீகள் இலக்கிய சங்கத்தின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.